
# கல்வெட்டு

# KALVETTU

திருவள்ளுவராண்டு 2036 (பார்த்திப ஆண்டு) சித்திரைத் திங்கள்



குருந்தமரத்தடியில் சிவனிடம் உபதேசம் பெறும் மாணிக்கவாசகர்

ஆவுடையார் கோயில் - ஓவியம்

கல்வெட்டு : காலாண்டிதழ் 66 [ஏப்ரல் 2005] விலை ரூ. 10/=

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.


புதிய கற்காலக்
கருவிகள்
பிக்கனஹள்ளி,
தருமபுரி மாவட்டம்





மோதூர் அகழாய்வுப்
பொருட்களைப்
பார்வையிடும்
தொல்லியல் துறை
சிறப்பு ஆணையர்
மற்றும் தருமபுரி
மாவட்ட ஆட்சியர்
திரு. சுதீப் ஜெயீன் இஆப.

ஆண்டிப்பட்டி
அகழாய்வில் கிடைத்த
பானை ஓடுகள்
தொல் பொருட்கள்



உள்ளே . . . பக்கம்


பதிப்புரை 1

1. பண்டைத்தமிழர் நீர் மேலாண்மை-இன்றைய பொருத்தப்பாடு
— முனைவர் பழ. கோமதிநாயகம் 2

2. ஆலத்தூர் சமணர் கோயில்
— முனைவர் இரா. ப. கருணானந்தன் 9

3. இராமநாதபுரம்-காசிவிசுவநாதர் கோயில் கல்வெட்டு
— சொ. சந்திரவாணன் 12

4. தொட்டியபட்டிச் செப்பேடு
— பொ. இராசேந்திரன், வெ. வேதாசலம் 14

5. புழல் முதற்குலோத்துங்க சோழன் கல்வெட்டு
— ஆய்வுக்குறிப்பு 17

6. தருமபுரி மாவட்டம் பிக்கனஹள்ளி புதிய கற்காலக் கருவிகள் பாகல்பட்டி - புதிய செய்திகள்
— ச. செல்வராஜ் 20

7. ஆத்மநாதர் கோயிலின் அழகுமிகு மண்டபங்கள்
— அர. வசந்தகல்யாணி, கோ. முத்துசாமி 23

8. Status report on the Archaeological excavations at Andipatti and Modur 29

9. செங்கற்பட்டு மாவட்ட ஆவணங்கள்
— புலவர் பா. கண்ணையன் 32

10. தமிழகக் கல்வெட்டுகள் படியெடுக்கும் முனைப்புத் திட்டம் 37



கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா, அவர்கள் சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் முதற்கட்டமாகக் கட்டப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடத்தை 3-3-2005 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள். இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலைய ஆட்சித் துறைச் செயலாளர் திரு. பு. ஆ. இராமையா, இஆப, தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. ம. இராசேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,
சிறப்பு ஆணையர்,
தொல்லியல் துறை.

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஹால்ஸ் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.
28-04-2005

# பதிப்புரை

"கல்வெட்டு" காலாண்டிதழ்-66 ஆய்வுக் கட்டுரைகள், அண்மையில் கண்டறியப்பட்ட அரிய தொல்லியல் செய்திகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றைத் தொகுத்தளிக்கிறது. சிறப்பான ஆய்வுக் கண்ணோட்டத்துடன் வெளியிடப்படும் இவ்விதழில்,

நீர் மேலாண்மை பற்றிய கட்டுரை இக்காலத்திற்கு ஏற்றது. படிப்பதற்கு மட்டுமல்லாது ஆழ்ந்து சிந்தித்து இன்றும் அந்தப் பண்டைய முறைகளைக் கையாண்டு நாம் பயனுறும் வகையில் அழகாகத் தரப்பட்டுள்ளது. ஆலத்தூர் சமணக்கோயில் வரலாறு சிறப்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரத்தில் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டு பிற்காலத்தைச் சார்ந்ததாயினும் வரலாற்றுச் செய்தியினைத் தருகிறது. மதுரை மாவட்டம் தொட்டியபட்டிச் செப்பேடு புதியதாகக் கண்டறியப்பட்டு, வரலாற்று ஏட்டில் தற்போது வலம் வருகிறது. புழல் திருமூலநாதர் கோயிலில் முதன்முறையாகக் கண்டறியப்பட்ட 11-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று புதிய தகவல்களைத் தருகின்றது.

தருமபுரி மாவட்டம் பிக்கனஹள்ளி, பாகல்பட்டி ஆகிய ஊர்கள் புதிய கற்கால மற்றும் பெருங்கற்காலத்தை எடுத்துக் காட்டுகின்ற புதிய சான்றுகளைத் தருகின்றன. ஆவுடையார் கோயில் அழகுமிகு மண்டபங்கள் தமிழரின் கட்டடக் கலைப் பாதையில் ஒரு மைல் கல்லாக இருப்பதை உணர்த்துகிறது. மோதூர், ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் நிகழ்ந்த அகழாய்வு பற்றிய முதலறிக்கை இங்கு தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

கோயிலில் ஆவணப்படுத்தப்பட்ட கல்வெட்டுகளின் அமைப்பு முறைகளே கி. பி. 18, 19-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து வழக்கிலிருந்ததைச் செங்கற்பட்டு மாவட்ட ஆவணங்கள் என்ற கட்டுரை காட்டுகின்றது.

இன்னும் கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் படியெடுக்கப்பட்டு வரும் கல்வெட்டுகளில் அரிய, சிறப்பான, சுவையான வரலாற்றுச் செய்திளைக் கூறுவனவும் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. துறையில் இதுகாறும் படியெடுக்கப்பட்டுள்ள, வெளிவந்த மற்றும் வெளியிடப்பட வேண்டிய கல்வெட்டு களின் விவரம் தரப்பட்டுள்ளது. மேலும் கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் செப்டம்பர் 2004 முதல் மார்ச் 2005 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் எண்ணிக்கை விவரமும் பட்டியலிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது.

அனைவரும் படித்துப் பயனுற வேண்டும் என்பதே எனது ஆவல்.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,
பதிப்பாசிரியர்

# பண்டைத் தமிழர் நீர் மேலாண்மை: இன்றைய பொருத்தப்பாடு

1

முனைவர் பழ. கோமதிநாயகம்

## முன்னுரை

இயற்கைச் சூழல் தமிழகத்தைச் சீரான தட்ப வெப்ப நிலையில் வைப்பதில்லை. வரலாறு காணாத வகையில் வெள்ளமும், அதனைத் தொடர்ந்து கடும் வறட்சியும் மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருக்கும். எனவே மழை நீரைச் சேமிப்பதிலும், சேமித்த நீரைத் திறம்படப் பயன் படுத்துவதிலுமே தமிழகத்தின் வேளாண்மை சார்ந்துள்ளது. இதற்குச் சான்றாக ஆயிரக்கணக்கான நீர்நிலைகள், ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், அணைக்கட்டுகள், வாய்க்கால்கள் அவற்றோடு தொடர் புடைய பிற கட்டுமானங்கள், சங்ககாலம் தொட்டு இன்றளவும் இருப்பதைக் காணலாம். அவற்றின் சிறப்பே, அவை எல்லாம் புதை பொருள் ஆகி விடாமல் இன்றும் பயன்படுகின்றன என்பதே ஆகும். இந்த ஏரிகள் அமைக்கப்பட்டுள்ள தொழில் நுட்பங்கள், தண்ணீரைப் பகிர் வதிலும், சிக்கனமாகப் பயன்படுத்துவதிலும் தமிழர்கள் கடைப்பிடித்த நீர் மேலாண்மைக் கோட்பாடுகள் இன்றளவும் ஏற்புடையவையாக உள்ளன. சங்க இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் காணப்படும் தொன்மை யான ஆனால் இன்றும் என்றும் பயன்படக்கூடிய நீர் மேலாண்மைத் தொழில் நுட்பங்கள் சிலவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

## கண்மாய்களின் தொன்மம்

திண்டுக்கல்லில் இருந்து 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது ஆத்தூர். அங்கு கரிசல் குளம், பகடைக்குளம், புல்வெட்டி குளம் என்று மூன்று அடுக்கில் குளங்கள் உள்ளன. ஒரே கண்மாயில் இரண்டு குறுக்குக் கரைகள் அமைத்து மூன்றாகப் பிரிக்கப்பட்ட இந்தக் கண்மாய் மிக அருமையான தொழில் நுட்பம் கொண்டது. மூன்று கண்மாய்களும் ஒன்றை விட ஒன்று உயர்ந்த நீர்மட்டம் கொண்டவை. நிலமட்டங்களுக்கு ஏற்ற வகையில் கண்மாய் நீர்மட்டம் அமைந்துள்ளது. இந்தக் கண்மாய் இருக்கும் இடத்திற்கருகில் முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் நீர் நிலைகளுக்கு அருகிலேயே இடுகாடுகளும், முதுமக்கள் தாழிகளும் அமைக்கப்படும். எனவே இக்கண்மாய் சங்க காலத்தைச் சேர்ந்தது என்று தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். 2000 ஆண்டுகளுக்கு மேலாக இக்கண்மாய் பயன்பாட்டில் உள்ளது என்பது இதன் சிறப்பு. இது போன்று, முதுமக்கள் தாழிகள் 59க்கும் மேற்பட்ட ஏரிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## ஏரிகளின் வடிவமைப்பு

சங்கப் புலவர் கபிலர் எந்த வடிவில் ஏரி இருக்க வேண்டும் என்பதைக் கூறுகிறார்.

> **அறையும் பொறையும் மணந்ததனைய**
> **எண்நாள் திங்கள் அணைய கொடுங்கரைத்**
> **தென்நீர்ச் சிறுகுளம் கீழ்வது மாதோ**
> **தேர்வன் பாரி தன் பறம்பு நாடே**

ஏரிக்கரை நீளம் குறைவாகவும் ஆனால் அதிக நீர் கொள்ளளவு கொண்டதுமான அமைப்பு, ஏரி எட்டாம் பிறை வடிவில் இருக்கும் போது ஏற்படும். இது ஏரி அமைப்பதில் மிகவும் சிக்கனமான வடிவமைப்பு.

''சிறுபஞ்சமூலம்'' நூலில் காரியாசான், ஏரிகள் அமைக்கப்பட வேண்டிய வரைபடத்தைத் தருகிறார்,

> **குளந்தொட்டு கோடு பதித்து, வழி சீத்து**
> **உளந்தொட்டு உழவயலாக்கி - வளந்தொட்டு**
> **பாடு படுங்கிணற் றோடென்றிவ்வைம் பாற்**
> **கடுத்தான் ஏகுசு வர்க்கத் தினிது.**

ஓர் ஏரியைக் கீழ்க்காணும் 5 அங்கங்களுடன் அமைப்பவன் சொர்க்கத் திற்குப் போவான் என்பது இப்பாடலின் பொருள்.

1. குளம் (குளம் தொட்டு)
2. கலிங்கு (கோடு பதித்து)
3. வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் போகும் கால்கள் ஆகிய வழிகளை அமைத்தல் (வழி சீத்து)
4. பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மூலம் ஆயக்கட்டுக் பகுதிகளை உருவாக்குதல் (உழுவயலாக்கி)
5. பொதுக்கிணறு அமைத்தல் (கிணறு)

முதல் நான்கு அங்கங்களும் கொண்டவை நாம் சாதாரணமாகப் பார்க்கும் ஏரிகள். ஆனால் ஏரிகளில் நீர் குறைவாக இருக்கும் போது, ஏரி மதகுகள் மூலம் தண்ணீர் பாய்ச்சுவது, அதிக நீர் விரயமாக்கும் வழி. அதே நேரத்தில், மதகுகள் மூலம் நீர் பாய்ச்சுவதை விட, நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது சிறந்த நீர் மேலாண்மை வழி. எல்லோரும் கிணறு தோண்ட முடியாது. ஆகவே பொதுக் கிணறு அமைத்து அனைவரும் தண்ணீரைப் பாய்ச்சிக் கொள்வது சிறந்த வழியாகும். தற்போது மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றை இணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்ற கோட்பாடு உலகெங்கும் பரவி வருகிறது (Conjuctive use) இந்த சிறந்த நீர் மேலாண்மை உத்தி, சங்கம் மருவிய காலத்தில் தமிழகத்தில் இருந்ததென்பதும், அது இன்று மீண்டும் பயனுக்கு வருகிறது என்பதும் தமிழர்களுக்கு பெருமை சேர்க்கும் செய்தியாகும்.

### ஏரிக்கரைகள்

மண் கரைகள் அல்லது மண் அணைகள் கட்டும் போது, நீர்க் கசிவைத் தடுப்பதற்காகக் களிமண்ணால் ஆன உட்சுவர் ஒன்றை அமைத்து, அதனை மூடி, மண்கரைகள் அமைப்பது வழக்கம். உலகெங்கும் இன்றளவும் இந்தத் தொழில் நுட்பம் பயன்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் உள்ள மிகப் பழமையான ஏரிகளில் இது போன்ற ஊடுசுவர்கள் இல்லை. நீர்க்கசிவும் இல்லை. தவிர அப்பகுதியில் கிடைத்த மண்ணைக் கொண்டே இந்த ஏரிகள் அமைத்திருந்தது வியப்பூட்டுகிறது. இதன் தொழில்நுட்பம் என்னவென்ற கேள்விக்கு சங்க இலக்கியங்களில் விடை கிடைக்கிறது. ஏரிக்கரைகள் ''அரை மண்'' பயன்படுத்திக் கட்டப் பட்டன என்று சங்க இலக்கியச் செய்தி கூறுகிறது. அப்பகுதியில் கிடைக்கும் மண்ணோடு, மண்ணை இறுக்கும் சில பொருட்களைச்(?) சேர்த்து அரைத்து, ''அரை மண்'' உருவாக்கி ஏரிக்கரைகளை அமைத் தனர். இறுகிய மண்ணாலும், பிற பொருட்களாலும் நீர்க்கசிவு தடுக்கப் பட்டுள்ளது. வீராணம் ஏரியில் புதிய மதகு ஒன்றை அமைப்பதற்காகக் கரையை வெட்டிய போது அது பாறை போல் இறுகி இருந்ததையும், நடுவில் ஊடு சுவர் அல்லது களிமண் இல்லாததும் காணப்பட்டது. தற்போது புதிய நீரித்தேக்கங்கள் அமைப்பதற்காகப் பொருத்தமான மண்ணைத்தேடி வெகு தொலைவிலிருந்து கொண்டுவந்தும் நீர்க்கசிவுகள் ஏற்படுவதைக் கண்கூடாகக் காணும்போது, நமது முன்னோர்களின் தொழில் நுட்பத் திறன் வியப்பூட்டுகிறது.

### தண்ணீர்ப் பங்கீட்டு முறைகள்

ஏரிகளில், பாசனத்திற்காகத் தண்ணீர் வெளியேறுவதற்கு மடை, மதகு, குமிழி போன்ற அமைப்புகள் இருக்கின்றன. இவையெல்லாம் காலங்காலமாகப் பயன்படுகின்றன. இந்த மடைகள் அனைத்தும் மிகத் துல்லியமாகக் கணக்கிடப்பட்டே கட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. கணக்கதிகாரத்தில் ''நீர்வழிச் சூத்திரம்'' என்ற பாடல் உள்ளது,

**ஒரு நாளின் நாழிகையை ஒல்லா மனத்தின்**
**உரு நாழிகைக்கு ஈத்து மானே - தருமிலக்கம்**
**சேர்த்ததற்கு வேறானது இன்னாழிகைக் கீந்து**
**பார்த்த தினம் பேரே பகர்**

ஒரு குளத்தின் நீர் முழுவதையும் பாய்ச்ச எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதனைக் கணக்கிட இப்பாடல் உதவுகிறது. இதன் உரை ஆசிரியர் மாதிரிக் கணக்கு ஒன்றையும் குறிப்பிட்டுள்ளார்.

ஓர் ஏரியில் உள்ள ஆயக்கட்டுக்கு 4 நாழிகையில் நீர்பாயும் மதகு ஒன்று, 6 நாழிகையில் பாயும் மதகு ஒன்று, 12 நாழிகையில் பாயும் மதகு ஒன்று இருக்கும் போது, மூன்று மதகுகளையும் திறந்தால் எவ்வளவு நேரத்தில் ஆயக்கட்டு முழுவதற்கும் நீர் பாயும்? என்பது கணக்கு. இதற்கு விடை காணும் வழி பாடலில் உள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒரு நாளின் நாழிகை | = | 60 | | | |
| ஒரு நாழிகைக்கு ஈந்து | = | முதல் மடை | 60/4 | = | 15 |
| | | 2ம் மடை | 60/6 | = | 10 |
| | | 3ம் மடை | 60/12 | = | 5 |
| | | | மொத்தம் | = | 30 |

''இந்நாழிகைக்கு ஈந்து'' 60/30 = 2

மூன்று மதகுகளையும் திறந்து விட்டால் ஆயக்கட்டு முழுமைக்கும் அதாவது 2 நாழிகையில் நீர் பாய்ந்து விடும் என்பதே இப்புதிருக்கு விடை.

இப்பாடல் தரும் சூத்திரம் மூலம் குளத்தின் கொள்ளளவு எவ்வளவு? பாசன மதகுகளின் எண்ணிக்கை? மதகுகளிலிருந்து வெளி வரும் தண்ணீரின் அளவு என்ன? பாசன வயலின் பரப்பு, மண் வகை, இருப்பிடம் ஆகியவற்றிற்கேற்ப இம்மதகுகள் திறக்கப்பட வேண்டிய கால அளவு என்ன? அனைத்து மடைகளையும் திறந்தால், குளத்தி லிருந்து எவ்வளவு நீர் வெளியேறும் ஆகியவற்றை அறியலாம். பண்டைத் தமிழர் மிகத் தெளிவாகத் திட்டமிட்டு, அதன் பிறகே ஏரிகளையும், மதகுகளையும் அமைத்துள்ளனர்.

18 கிராமங்களில் உள்ள நிலங்களுக்கு தூசி - மாமண்டூர் ஏரியி லிருந்து நீர் பாய்கிறது. ஏரிக்கரையின் வலது மற்றும் இடது கோடி களில் ஒவ்வொரு மேட்டு மடைகள் உள்ளன. அம்மடைகளை அடுத்து இரண்டு பள்ள மடைகள் உள்ளன. வலது புற மேட்டு மடையும் பள்ள மடையும் 9 கிராம வயல்களுக்கு நீர் பாய்ச்சுகின்றன. இடதுபுற மேட்டு மடையும்,பள்ள மடையும் மீதமுள்ள 9 கிராமங்களுக்கு நீர் பாய்ச்சு கின்றன. சண்டை சச்சரவின்றி சமபங்கு வழங்குவது போல் இம்மடைகள் அமைந்திருப்பதை இன்றும் காணலாம்.

இதன் அடிப்படையிலேயே, தண்ணீர் ஏரியிலிருந்து வெளிவரும் தூம்பிற்கு ''நாழிகை வாயில்'' போன்ற பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. மாறன் சேந்தன் (கி.பி.770) கல்வெட்டில் ''கணிக் கூற்றோடு நீர்'' என்ற சொற்றொடர் உள்ளது. இதன் பொருள் ''ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு அந்நிலத்தில் பாயக்கூடிய நீரின் அளவு'' என்பதாகும். இதே போல் ''நீர்க்கிசைந்த வண்ணம்'', ''நீர்க் கீய்ந்த வண்ணம்'' என்ற சொற்றொடர்கள் ''நீர்ப்பங்கீட்டு முறைப்படி'' என்ற பொருளில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனின் (கி.பி.815-860) கல்வெட்டு ஒன்று ஸ்ரீகண்ட வாய்க்காலில் வரும் நீரை ஒழுங்குபடுத்தி, எந்தெந்த நிலங் களுக்கு, எவ்வளவு நேரம் நீர் பாய்ச்ச வேண்டும்? இந்த நீர் பாய்ச்சலில்

யார் யாருக்கு எந்த வரிசைக் கிரமத்தில் பாய்ச்ச வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இந்த ஒழுங்கு முறை தவறியவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது ''சுழற்சி முறைப் பாசனம்'' என்று குறிப்பிடப்படும் நீர் மேலாண்மை வழி முறையை கி.பி.9-ம் நூற்றாண்டுக் கல்வெட்டு கூறுகிறது.

சிந்து நதிப் பாசனப் பகுதியில் முகலாயர் ஆட்சியில் உருவான ''வாரபந்தி'' என்ற சுழற்சிமுறைப் பாசனம், பாலாற்று ஏரிகளுக்காக 18ஆம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்ட ''மாமூல் நாமா'' என்ற சுழற்சி முறை, ஆகியவற்றிற்கு எல்லாம் முன்னோடியாகத் தமிழர்கள் தண்ணீர்ப் பகிர்வு முறையில் அறிவியற் பூர்வமாகச் சிந்தித்து, நீர் விரயமாகாமல் பங்கீடு செய்தது அவர்களின் மேலாண்மைத் திறமைக்குச் சான்றாகும்.

புதுக்கோட்டை மாவட்டம் நாஞ்சூர் ஏரியில் தண்ணீர் பங்கீடு செய்வதற்கு ''முறைப்பானை'' என்ற வழக்கம் 100 ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்ததாக அவ்வூரார் சொல்கின்றனர். இந்த வழக்கம் எப்போது தொடங்கியது என்பது தெரியவில்லை. ஆனால் தற்போது இல்லை. 10 முதல் 12 லிட்டர் கொள்ளவு கொண்ட ஒரு செப்புப் பானையின் அடிப்பாகத்தில் ஒரு சிறிய துளை இடப்படும். இது போன்ற துளை இடுவதற்கான ஊசியின் அளவுகள் குறித்த கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. மூன்று கற்களைப் பரப்பி அதன் மேல் இந்த செப்புப் பானையை வைப்பார்கள். பானையில் முழுவதும் நீர் நிரப்பப் படும். துளையிலிருந்து நீர் வடியும். செம்புத் தண்ணீர் முழுவதும் காலியானால், ஒரு ஏக்கர் நெற்பயிருக்குத் தண்ணீர் பாய்ந்து விடும். இதுவே ''முறைப்பானை'' எனப்பட்டது. இதனைக் கண்காணிக்கவும், நீர்பாய்ச்சவும் ''குமுழிப்பள்ளன்'' என்ற பணியாள் இருந்திருக்கிறார். காலை முதல் மாலை வரை இம்முறையில் நீர் பகிரும் காலம் கணக்கிடப்பட்டது. இதே போன்ற முறைகள் ஆப்பிரிக்காவில் 1900 ஆண்டுகளாகக் (கடிகாரம் கண்டுபிடிக்கப்படும் வரை) கடைப்பிடிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

## நீர் உரிமை

ஆற்றிலிருந்து நீர் எடுத்து வரும் வாய்க்காலுக்கு மேல் பகுதியில் மற்றொரு புதிய வாய்க்கால் வெட்டக் கூடாது என்பதை, ''காலுக்கு மேல் கால் கல்லலாகாது'' என்று குருவித்துறை பெருமாள் கோயில் கல்வெட்டு கூறுகிறது. மேல் பகுதியில் புதிய வாய்க்கால் வெட்டுவது பழைய பாசனதாரர்களின் உரிமையைப் பாதிக்கும் என்பதாலேயே இக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. உலகெங்கும் இன்று ஏற்றுக் கொள்ளப்படும் ''முன்னுரிமை'' (RIPARIAN RIGHT) என்ற உரிமை பற்றி அன்றே கூறியிருப்பது தமிழர்களின் தொலைநோக்குப் பார்வையைக் காட்டுகிறது. புதுக்கோட்டைக் கல்வெட்டு(666) ஒன்று கீழ்க் காணும் செய்தியைத் தருகிறது.

''ஆலந்தூர் ஊரார், பெருங்குமிழி மூலம் 180 நாழிகை (3 நாள்களுக்கு) தண்ணீர் பெறும் ஆயக்கட்டுப் பரப்பிலிருந்து 12 மா (3.96 ஏக்) நிலத்தையும் 16 நாழிகை நீர் பெறும் உரிமையையும், அவ்வூர்க் கோயில் நாட்டியப் பெண்ணிற்கு ஏலத்தின் மூலம் விற்றனர்''.

நிலத்தோடு, நீருக்கும் உரிமை இருந்தது இதன் மூலம் தெரிகிறது. தற்போது இது போன்ற உரிமை இல்லாததால் தண்ணீர் பெறுவதில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. நீருக்கு உரிமை கோர முடியவில்லை.

## கிராமப் பொதுச்சொத்து

ஏரிகள், குளங்கள் போன்ற நீர் நிலைகள் கிராமப் பொதுச் சொத்தாக இருந்தன. அவற்றைப் பராமரிப்பதிலும், நிர்வாகத்திலும் விவசாயிகளுக்கு மட்டுமின்றி சலவைத் தொழிலாளர், மீன் பிடிப்போர் மற்றும் கால்நடை வளர்ப்போர் போன்று ஏரி நீரைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும் உரிமை இருந்தது. தண்ணீரிலும் உரிமை இருந்தது. சலவைத் தொழிலாளர்களுக்கும், கால்நடைகளுக்கும் ஆண்டு முழுவதும் தண்ணீர் தேவை. எனவே விவசாயத்திற்குப் பயன்படுத்தும் போதே, குறிப்பிட்ட அளவு தண்ணீரை மீதம் வைக்கும் வழக்கம் இருந்தது. இன்றும் பல கிராமங்களில் உள்ளது.

பல்லவர் காலத்தில் வெட்டப்பட்ட ''அய்யங்கார் குளத்தின்'' நடுவில், ஓர் ஆழமான சிறிய குளம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குளத்தில் உள்ள தண்ணீரை மதகுகள் மூலம் வெளியேற்ற முடியாது. பாசன காலம் முடிந்து, குளம் வற்றிய பின்பும், கோடை காலத்தில், இந்த நடுக்குளத்தில் தண்ணீர் இருக்கும். பாசனம் அல்லாத பிற தேவைகளுக்கு இந்தத் தண்ணீர் பயன்பட்டது. காஞ்சிபுரம் அருகில் இன்றும் இக்குளத்தைக் காணலாம்.

மீன் பிடிப்போரும், சலவைத் தொழிலாளர்களும் பகல் பொழுதில் எப்போதும் குளக்கரையில் இருப்பதால் குளக்கரைக் காவல் மற்றும் மடை காவல் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகக் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த வழக்கம் இன்றும் கர்நாடக மாநிலத்தில் உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், நிலவரி வருவாயைக் கருத்தில் கொண்டு, குளப்பராமரிப்பு ஆயக்கட்டுதாரர்களிடம் மட்டும் ஒப்படைக்கப்பட்டது. இதுவே மற்றவர்களுக்கு ஏரிகளின் மீது அக்கறை இல்லாமல் போகும்படி செய்து விட்டது.

## மழைநீர் சேகரிப்பு

கிராமப்புறங்களில் மழைநீர் சேகரிப்புக்கு உருவாக்கப்பட்ட ஆயிரக் கணக்கான ஏரிகள், குளங்கள், ஊருணிகள் மற்றும் கோவில் குளங்கள் அனைத்தும் இன்றும் அப்பணியினைச் செவ்வனே செய்கின்றன. நகர்ப்

புறங்களில் மழைநீர் சேகரிப்பு முயற்சி இராஜராஜன் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு) காலத்திலேயே தஞ்சையில் தொடங்கப்பட்டது. தஞ்சைப் பெரியகோயில் வளாகத்தில் பெய்யும் மழை நீர் முழுமையும் சேமிக்கும் இடமாகச் சிவகங்கை குளத்தை இராஜராஜன் அமைத்தான் என்பது கல்வெட்டுச் செய்தி. அதற்குப் பின்னர் தஞ்சையை ஆண்ட செவ்வப்ப நாயக்கன், செவ்வப்பன் ஏரியை (சேப்பன வாரி) வெட்டி அதில் தஞ்சை நகரில் பெய்யும் மழை நீரைச் சேகரித்து, வண்டல் கலந்த நீர் தெளிந்த பின்னர், தனிக்குழாய் மூலம் (அகழியில் கலக்காமல்) சிவகங்கைக் குளத்தில் சேமிக்கும் படி அமைத்தான். பிறகு நிலத்தடியில் புதைக்கப்பட்ட சுடுமண் குழாய்கள் மூலம் நகரில் உள்ள முக்கிய குளங்களுக்கும், கிணறுகளுக்கும், அரண்மனைக்கும் விநியோகம் செய்த தடயங்கள் கிடைத்துள்ளன. (தினமணி 6-8-2003)

**முடிவுரை**

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டவை மிகச்சிலவே. தமிழ்நாட்டில் உள்ள ஏரிகளும், குளங்களும், ஊருணிகளும் ஒப்பற்ற வரலாற்றுச் சின்னங்கள். 100 ஆண்டுகளே ஆன கட்டடத்தை இடிக்கும் போது ஒட்டு மொத்தமாகக் குரல் கொடுக்கும் தமிழர்கள், 2000 ஆண்டு பழமை வாய்ந்த ஏரிகளை அழிக்கும் போது பாராமுகமாக இருப்பது ஏன் என்று விளங்கவில்லை. கட்டுமானங்கள், அதன் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றைத் தூர்வாருகிறோம், புதுப்பிக்கிறோம் என்று சொல்லிச் சிதைத்துக் கொண்டிருப்பவர்களும் நாம் தான். இச் சிதைவைத் தடுக்க இயலாத நிலையில், அவை பற்றிய செய்திகளை யாவது பதிவு செய்து வைக்க வேண்டியது தமிழர்களின் கடமை. நமது சந்ததியினருக்கு இச்செய்திகளாவது போய்ச் சேரட்டும் என்ற முறையில் இத்தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

2

# ஆலத்தூர் சமணர் கோவில்

**முனைவர் இரா. கருணானந்தன்**
தொல்லியல் துறை, கோவை

கோவை மாவட்டம் அவினாசி வட்டத்தில் புஞ்சைபுளியம்பட்டிக்கு அருகில் ஆலத்தூர் என்னும் ஊரில் சமணக்கோயில் ஒன்று உள்ளது.

ஆலத்தூரைச் சுற்றிப் பல இடங்களில் பெருங்கற்கால ஈமச்சின்னங்களின் சிதைவுகள் உள்ளன. சங்க இலக்கியப் புலவருள் ஆலத்தூர்க் கிழாரும் ஒருவர். ஆலத்தூர் என்ற பெயரில் தமிழ்நாட்டில் பல ஊர்கள் உள்ளன. எனவே ஆலத்தூர்க் கிழார் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று அறிய முடியவில்லை என்று உ.வே.சா. அவர்கள் புறநானூற்றுப் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். புறநானூற்றில் 5 பாடல்களும் குறுந்தொகையில் 2 பாடல்களும் என இலக்கியத் தொகுப்பில் 7 பாடல்களை ஆலத்தூர்க் கிழார் பாடியுள்ளார். இவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி, சேட்சென்னி நலங்கிள்ளி என்ற 3 சோழ அரசர்களைப் பற்றிப் பாடியுள்ளார். சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் முற்றியிருந்தானை ஆலத்தூர்க் கிழார் பாடியதாகப் புறநானூற்றுப் பாடல் (எண் : 36) ஒன்று உள்ளது. நன்றி கொன்றவர்க்கு உய்வில்லை என்று அறம் பாடியது என்று திருக்குறளைப் புறநானூற்றில் (புறம் : 34) மேற்கோள் காட்டியவர் ஆலத்தூர்கிழார். சோழனின் கருவூர்ப் போரைப் பற்றிப் பாடியதால் ஆலத்தூர்க் கிழாரைக் கொங்கு நாட்டினர் என்றும்; இவ்வாலத்தூரில் சங்ககால மக்களின் பெருங்கல் ஈமச்சின்னச் சிதைவுகள் இருப்பதாலும் சங்க இலக்கியப் புலவராகிய ஆலத்தூர்க் கிழார் பிறந்த ஊர் இந்த ஆலத்தூரே என்று சொல்வதற்கு வாய்ப்பு உள்ளது.

ஊருக்கு நடுவில் பாழடைந்த நிலையில் வீடுகளுடன் வீடாய் சமணக் கோயில் திகழ்கிறது. மக்கள் கோயிலை அம்மணீசுவரர் கோயில் என்று அழைக்கின்றனர். இப்பெயர்வழக்கே பண்டைநாளில் இக்கோயில் சமணக் கோயிலாகத் திகழ்ந்தது என்பதை உணர்த்துகிறது. அம்மணீசுவரர், அமணலிங்கேசுவரர் என்ற பெயரில் இன்று சிவன் கோயிலாகத் திகழும் கோயில்கள் அனைத்தும் பண்டைநாளில் சமணர் கோயில்கள் என்பதையும் உணர்தல் வேண்டும். தற்போது கோயிலின் கருவறை முற்றிலுமாக சிதைந்து விட்டது. கருவறையின் அதிட்டானப் பகுதி மட்டுமே உள்ளது. கருவறை சிதைந்துவிட்டதால் கருவறையில் இருந்த மகாவீரர் சிற்பம் பாதுகாப்புக் கருதித் தற்போது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கோவை அகழ்வைப்பகத்திற்குக் கொண்டுவரப்பெற்று காட்சிப்படுத்தப் பெற்றுள்ளது.

கருவறைக்கு முன்புள்ள முன்மண்டபம் நல்லநிலையில் உள்ளது. முன் மண்டப வாசலில் உள்ள இரு கற்களிலும் 13-ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டு உள்ளது. முன்மண்டபத்தில் நல்லநிலையில் தூண்கள் உள்ளன.

முன்மண்டப மேல்விதானத்தில் தாமரை போன்ற அமைப்பு உள்ளது. முன் மண்டபத் தென்சுவரில் கன்னடக் கல்வெட்டு உள்ளது. கருவறை தெற்குவாசல் கல்லில் வட்டெழுத்துக் கல்வெட்டு உள்ளது.

கருநாடக மாநிலம் சரவண வெள்ளைக்குளத்திலிருந்து சமணசமயம் கொங்குநாட்டின் வழியாகத் தமிழகத்திற்குள் நுழைந்த சமண முனிவர்கள் தாங்கள் வழிபடுவதற்கென கோயில்களைக் கட்டிக்கொண்டனர்.

பண்டை நாளில் கொங்கு நாட்டில் சமணம் ஒருவகையான நேர்கோட்டில் பரவியது என்று கருதலாம். நல்லூர், ஆலத்தூர், விசயமங்கலம், திங்களூர், சீனாபுரம், வெள்ளோடு, பூந்துறை, அறச்சலூர், ஐவர்மலை என்று அனைத்துச் சமண நிலையங்களும் ஒருவகையான நேர்கோட்டில்தான் அமைந்துள்ளன. சமணம் பெரும்பாலும் வணிகர்கள் பின்பற்றிய சமயம் என்பதால் சமண நிலையங்களும் பெருவழியிலே அமைந்தன. ஆலத்தூரும் வணிகப் பெருவழியில் அமைந்ததால் சமணர் அங்கு குடியேறி சமணக்கோயிலைக் கட்டியிருக்க வேண்டும்.

பத்தாம் நூற்றாண்டில் கொங்குச் சோழனான வீரசோழன் ஆட்சிக் காலத்தில் ஆலத்தூரில் சமணர் கோயில் அமைக்கப்பெற்றது. வீரசோழனின் மனைவி வானவன் மாதேவி ஆலத்தூரில் சமணக்கோயிலைக் கட்டினாள் என்று கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு வானவன் மாதேவியை நம்பிராட்டியார் (அரசனின் மனைவி) என்றும் சித்தரையர் என்னும் சிற்றரசரின் மகள் என்றும் தெரிவிக்கிறது.

கல்வெட்டுகள் ஊர்ப்பெயரை வடபரிசாரநாட்டு ஆலத்தூர் என்று தெரிவிக்கின்றன. எனவே சங்ககாலம் தொடங்கி இன்று வரை ஆலத்தூர் என்ற ஊர்ப் பெயரில் எந்த மாற்றமும் பெறாதது ஒரு தனிச் சிறப்பு. ஆலமரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆலத்தூர் என்னும் பெயர் சூட்டப் பெற்றிருக்க வேண்டும். கல்வெட்டுகள் சமணக் கோயிலை வீரசங்காதப் பெருப்பள்ளி என்று அழைக்கின்றன. கல்வெட்டுகள் சிவபெருமானை அழைப்பதைப் போன்றே ஆலத்தூர்க் கல்வெட்டுகளும் சமணக் கோயிலில் குடிகொண்ட இறைவனை ஆளுடையார் என்று அழைத்துள்ளன. வீரசோழனின் மனைவி அமைத்த கோயில் என்பதால் வீரசங்காதப் பெரும்பள்ளி எனப் பெயர் பெற்றது என்று கருதுவதற்கும் கல்வெட்டு இடம் தருகிறது.

கருவறையில் கோயில் கொண்டிருந்தவர் சமணசமயத்தின் 24வது தீர்த்தங்கரராகிய வர்த்தமான மகாவீரர் கல்வெட்டுகள் இவரை ஆலத்தூர் அடிகள் என்றும் ஜினாயனார் என்றும் அணியாத அழகிய நாயனார் என்றும் அழைக்கின்றன. உலகத்துன்பங்களை வெற்றி கொண்டவர் என்ற பொருளில் ஏற்பட்ட சொல் ஜினாயனார் என்பது. ஆடையற்றவர் (திகம்பரர்) என்ற பொருளில் ஏற்பட்ட சொல் அணியாத அழகிய நாயனார் என்பது. ஆலத்தூர் மகாவீரர் கருங்கல்லில் அழகாகக் காட்சியளிக்கிறார், அசோக மரநிழலில் முக்குடையின் கீழே மகாவீரர் தியான முத்திரையில் அமர்ந்துள்ளார்.

கொங்கு நாட்டில் ஆலத்தூரைத் தவிர்த்து வேறு சில ஊர்களிலும் சமணக்கடவுளர் சிற்பங்கள் அறியப்பெற்றுள்ளன. காங்கேயத்திற்கு அருகில் உள்ள பரஞ்சேர்பள்ளி, சர்க்கார் சாமக்குளம் என்னும் கோயில்பாளையம் பொங்கலூர் முதலிய ஊர்களில் சமணக் கடவுளர் சிற்பங்கள் உள்ளன. சிதைவு களுக்கிடையிலும் இவ்வூர்க் கல்வெட்டுகள், சிற்பங்கள் சமய வரலாற்றை நமக்கு எடுத்துக் கூறுகின்றன. எனவே அவற்றைப் பாதுகாப்பது வரலாற்று ஆர்வலர் களின் கடமை.

## தர்ம சத்திரம்

*இந்தியத் தொல்லியல்துறை கங்கை கொண்ட சோழபுரம் பெரிய கோயிலின் முன்புறம் உள்ள கோயில் இடங்களைக் கையகப்படுத்திய போது அங்கிருந்த வீடுகளின் இடிபாடுகளிலிருந்து கி.பி. 1917-ஆம் ஆண்டு வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று புதிதாகக் கண்டறியப்பட்டது. அதில் இக்கிராமத்தில் மாணிக்கத்தம்மாள் தர்மசத்திரம் ஒன்று இருந்த தாக தெரியவருகிறது. ஆனால் இன்று அதற்கான தடயங்கள் ஏதும் காணப்படவில்லை.*

கல்வெட்டு வாசகம் :-

உ

சிவமயம்

1. கெங்கை க
2. ண்டபுரம் மு
3. ருக செட்டியா
4. ர் குமாரத்தி
5. ஓலையூர் சா
6. குமரசாமி செ
7. ட்டியார் பாரியா
8. ள் மாணிக்கத்
9. தம்மாள் தர்ம
10. சத்திரம் 1917
11. பிங்கள இ
12. வைகாசி மாச
13. ம் 29 உ

குறிப்பு :-

*கங்கைகொண்ட சோழபுரம் முருக செட்டியாரின் மகளும், ஓலையூர் சா. குமாரசாமி செட்டியாரின் மனைவியுமான மாணிக்கத் தம்மாள் பெயரில் தர்மசத்திரம், கி.பி. 1917ல் பிங்கள வருடம் வைகாசி மாதம் 29ம் தேதி நிறுவப்பட்டது.*

தகவல் : **ச. பரணன்**
**காப்பாட்சியர்**

# இராமநாதபுரம் - காசிவிசுவநாதர் கோயில் கல்வெட்டு

3

**செ. சந்திரவாணன்**
*காப்பாட்சியர், இராமநாதபுரம்*

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தில் அமைந்துள்ள இராமலிங்க விலாசம் அரண்மனையின் மேற்கிலுள்ளது முகவை ஊரணி. இவ்வூரணியின் தெற்குக்கரைப் பகுதியில் மேற்குப் பார்த்த சிவன் கோயில் ஒன்று பழுதுபட்ட நிலையில் காணப்படுகின்றது.

இக்கோயில் காசிவிசுவநாதர் கோயில் என்று மக்களால் அழைக்கப்படுகின்றது. திருப்பணிக்கு ஆட்பட்ட நிலையிலுள்ள கருவறையுள் லிங்கத் திருமேனி இல்லை. அடி முதல் கூரை வரை கருங்கல்லால் ஆன எளிமையான கட்டடக் கலை அமைப்பினைக் கொண்டுள்ளது. கூரைக்கு மேல் செங்கல் சுண்ணாம்பால் ஆன 'ஏகதள விமானம்' கலசமின்றிக் காணப்படுகின்றது.

கருவறை, அரைமண்டபம், முன்மண்டபம் என்ற அமைப்பில் காணப்படும் இச்சிவன் கோயில் முன் மண்டபத்தில் தெற்குப் பார்த்த நிலையில் அம்மன் சன்னதி அமைந்துள்ளது. கருவறை மட்டும் உள்ள இச்சன்னதியின் மேற்குச் சுவர்ப் பகுதியில் கல்வெட்டொன்று காணப்படுகின்றது.

## கல்வெட்டுச் செய்தி

தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பட்ட மணிப்பிரவாள நடையில் காணப்படும் இக்கல்வெட்டு கி.பி. 1835-ஆம் ஆண்டைச் சேர்ந்தது. சாலிவாகன சகாப்தம் குறிப்பிடப்படாமல் 'கலியப்தம்' எனக் கலியாண்டு குறிப்பிடப்படுகின்றது. கலியாண்டு குறிப்பிடும் வழக்கம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை வழக்கத்தில் உள்ளது என்பது சிறப்புடையது எனலாம்.

மன்னன் பெயர் இன்னதென்று குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டைக் கொண்டு இது ராணிமுத்து வீராயி நாச்சியார் அவர்கள் காலத்தியது எனக் கூறலாம். இவரின் கல்வெட்டு இதே முகவை ஊரணியின் கிழக்கிலுள்ள 'திரௌபதி அம்மன்' கோயிலில் (கி.பி. 1836) காணப்படுகின்றது.

இராமநாதபுரம் சீமை அரண்மனை தேவஸ்தானத்து பேஷ்கார் (கோயில் நிருவாகத்தார்) சாமாவய்யர் என்பவரின் தமையன் காசிவாசி வெங்கடேஸ்வரய்யர் அவர்களால் இக்கோயிலில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்ற செய்தியினைத் தருகின்றது இக்கல்வெட்டு.

## கல்வெட்டு

1. உ விஸ்வநாத ஸ்வாமி ஸஹாயம்
2. க ஸ்ரீ ஸ்வஸ்தி சகாப்தம் ௨௱௰
3. ஹூ ஆவணி மீ ௰ ௨ ஸோம வாரத்தில்
4. களஞ்ஞு ண்ஞு ஷோதத்தில் குவஸ்தும்பெஸ௵
5. த்து த்தில் யஜமானஸ்வரூப ஸ்வரூபகனான
6. கிருஷ்ணய்யர் வெகுதூர ராமநாதபுரம் சீமை
7. பேஷ்கார் சாமாவய்யர் தமையன் கா
8. ஸிவாஸி வெங்கிடேஸ்வரய்யர்
9. செய்விச்ச நிர்மூதாலிங்க ப்ரதிஷ்டை
10. விசாலாட்சி அம்மன் ஸஹாயம்.

பின்குறிப்பு :

கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ்க் கல்வெட்டாய்வு மேற்கொண்ட போது கண்டறியப்பட்டது.

## சாமு

பண்டைய இந்திய படைப்பிரிவுகளுள் சாமு என்பதும் ஒன்று. ஒரு சாமு என்பது இத்தனை தேர், இத்தனை யானை, இத்தனை குதிரை, இத்தனை காலாட்படை கொண்டது என்று எண்ணிக்கை குறிப்பிடுவதில் கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் இது பெரும் படைப்பிரிவு என்பதில் ஐயமில்லை. சோழ அரசன் முதல் இராஜாதி ராஜனின் (கி.பி. 949) பெரும்படை நாயகனாக இருந்த மலை மண்டலத்து நந்திக்கரைப் புத்தூர் வெள்ளங்குமரன், திருவொற்றியூர்க் கல்வெட்டின் சமஸ்கிருதம் பகுதியில் "மகா சாமு நாயகோ" என்று குறிப்பிடப்படுகிறான்.

**சீ. இராமச்சந்திரன்**
கல்வெட்டாய்வாளர்

# 4 தொட்டியபட்டிச் செப்பேடு

பொ. இராசேந்திரன்,
வெ. வேதாசலம்

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டத்திலுள்ளது. பு. தொட்டிய பட்டி கிராமம். பேரையூர்க்கு அருகிலுள்ள இக்கிராமத்தில் திரு. கே. சுப்புராஜ் என்பவரிடம் செவ்வக வடிவில் அமைந்த ஒரு சிறிய செப்பேடு தமிழகத் தொல்லியல் துறையினரால் கல்வெட்டாய்வின் போது கண்டறியப்பட்டது. இது தொடர்பான செய்தியைத் தந்து இப் பட்டயத்தை ஆய்வுசெய்ய உதவியவர் பேரையூர் ஜமீன்தார் ஆவார்,

## காலம்

செப்பேடு கூறும் நிகழ்ச்சி திருமலைநாயக்கர் காலத்தில் நடை பெற்றதாகக் கூறப்பட்டாலும் கி.பி. 1800-க்குப் பிறகு பத்தொன்ப தாம் நூற்றாண்டில் இச்செப்பேடு எழுதப்பட்டிருக்க வேண்டும். இச் செப்பேட்டில் குறிப்பிடப்படும் 'ஆனையூர் தாலுகா' ஆங்கிலேயர் காலத்தில் உருவானது. பேரையூர்ப் பாளையக்காரரை 'ஜமீன்தார்' என்று இப்பட்டயம் குறிப்பிடுகிறது. பேரையூர்ப் பாளையக்காரர்க்கு 'ஜமீன்தார்' என்ற நிலையும் மதிப்பும் ஏற்பட்டது ஆங்கிலேயரின் காலத்தில் - பத்தொன்பதாம் நூற்றாண்டிலாகும். இதன் காரணமாகவும் இச்செப்பேடு பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருத வேண்டியுள்ளது. இதுபோன்று திருமலை நாயக்கர் காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் பிற்காலத்தில் செப்பேடாக எழுதப்பட்டமைக்குப் பல சான்றுகள் உள்ளன.

## அமைப்பும் செய்தியும்

பட்டயம் 'றாமசெயம்' என்ற வாசகத்துடன் தொடங்குகிறது. தமிழில் முப்பது வரிகளில் இதன் வாசகம் எழுதப்பட்டுள்ளது. இப் பட்டயம் ரௌத்திரி ஆண்டு ஐப்பசி மாதம் 19-ஆம் தேதி எழுதப் பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. காலக்குறிப்பினை அடுத்து பட்டயச் செய்தி வருகிறது. இறுதியில் இப்பட்டயத்தினைச் செய்தவன் மதுரை மேலவாசல் இருளப்ப ஆசாரி என்றும் இதனை அழித்தவர்களைக் கொப்பயசாமியும் கம்பத்தடியானும் கேட்பார்கள் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் (கி.பி. 1623-1659) ஒரு முறை சீமை பார்ப்பதற்காக மதுரையை விட்டுப் புறப்பட்டு உசிலம் பட்டிக்கு அருகிலுள்ள ஆனையூர் தாலுகாவில் வந்து தங்கியிருந்தார்.

அப்போது அவர் முன்பாகப் புல்லுக்கட்டுத் தொட்டியபட்டியிலிருக்கும் வடபுலிநாயக்கன் என்பவன் அரிசி, பருப்பு, பால்பசு, எரி துறும்பு, பாதகாணிக்கை பதினைஞ்சு பொன் ஆகியவற்றை வைத்துச் சந்தித்தான். வடபுலிநாயக்கன் தனக்கு அளித்த மரியாதையைக் கண்ட திருமலைநாயக்கர் மகிழ்ச்சியடைந்து அவனுக்கு என்ன வேண்டுமென்று கேட்டார். அதற்கு அவன் தனது பகுதியிலுள்ள கொப்பயசாமி கோவிலுக்கு ஊரைச் சேர்ந்த குளத்திற்கு அருகில் பெரியமடைப் பாசனத்தில் மானியமாக நிலம் (உ.இ. செய்நிலம்) வேண்டுமென்று கேட்டான். மேலும் இக்கோயிலின் மரியாதையாகத் தீர்த்தம், திருநீறு ஆகியவற்றைத் தும்பிச்சிநாயக்கனுக்கு கோவில் வாசலில் வைத்து அளிக்க வேண்டும் என்று முறையிட்டான். அவன் குரலுக்குச் செவிசாய்த்த திருமலைநாயக்கர் தனது திருக்கரத்தால் கையொப்பம் இட்டுத் தாம்பூர பட்டயம் வழங்கியதாக இப்பட்டயம் கூறுகிறது. கல்லும் காவேரியும் புல்லும் பூமியும் உள்ளவரை இத்தர்மம் நடைபெற வேண்டும் என்று இப்பட்டயத்தின் இறுதியில் கூறப்பட்டுள்ளது.

### செப்பேட்டு வாசகம்

1. றாம செயம்
2. றவுத்திரி ஷு அப்பிய மீ ௰சு மதுறாபுரியி
3. லிறுக்கும் றாசமானிய றாயர் ஷத்திரி திறும
4. லை னாயக்கறவகள் சீமை பாற்க்க ஆனையூர்
5. த்தாலுகாவில் வந்து யிரங்கி சீமை பாற்
6. க்கும் போது புல்லுக்கட்டு தொட்டியபட
7. டியிலிறுக்கும் வடபுலினாக்கன் ஆட்டுக்கி
8. டாய் அரிசி பறுப்பு ரா பால்ப் பசு அக
9. பாதகாணிக்கை ௰ரு யெரிதுறும்பு
10. யிவளவு சாமான் வய்த்து றாசா சந்தி
11. ப்புக் கண்டான் றாசாவுக்கு சந்தோசமாகி ஒ
12. னக்கு யென்ன வேணுமென்று கேட்டாற்
13. யென் கொப்பயசாமி கோவிலுக்கு
14. சேர்ந்த கொளத்துக் கறுகாமையிலை முந்
15. துன நிலையம் கொப்பயசாமி கோவி
16. லுக்கு மானியம் தொட்டியபட்டி கம்மாயி
17. லை நீற் பெரிய மடைப் பாசணத்தில் - உஇ
18. செயி நிலம் கொப்பயசாமிக்கி மாநிபம் யி
19. ந்த சுவாமி கோவில் தீர்த்தம் திறுனூறு து

20. ம்பிச்சி னாயக்கனூரி சமீந்தாறுக்கு கோ
21. வில்ப்படி வாசலில் வயித்து கொள்கிறது யிந்த படிக்கி வடபுலி நாக்கன் தாம்
22. பூற பட்டயம் வேணுமென்று கேட்டான்
23. அந்தப்படிக்கி உத்தறவு ஆச்சுது திறுமலை
24. நாயக்கர் திறுக்கறுத்தால் கயிஒப்பம் க
25. லுங்காவேரியும் புல்லு பூமியும் உள்ள
26. ரையிலும் ஆண்டு வறவும் யிந்தப் பட்ட
27. யம் செய்தவன் மதுரை மேலவாசல் யி
28. றுளப்பனாசாரி யிதை அடி அளித்தால்
29. கொப்பயசாமி கேள்ப்பாற் கம்பத்தடிய
30. ரன் கேள்ப்பான் உ.

## திருவம்பாவை

*திருப்பாவை, திருவெம்பாவை ஆகியவை முறையே* **வைணவ,** *சைவ சமயங்கள் சார்ந்த மார்கழி நோன்பு தொடர்பான பாடல்கள் என நாம் அறிவோம். பரிபாடலில் குறிப்பிடப்படும் அம்பா ஆடல் என்ற மரபே, ஏலோ என்ற நாட்டுப் புறப்பாடல் ஒலிக் குறிப்புடன் சேர்ந்து ''ஏலோ அம்பா'' என்றும் ''ஏலோரம்பாவாய்'' என்றும் தொடக்க காலத்தில் குறிப்பிடப்பட்டு, காலப்போக்கில் ''ஏலோரெம் பாவாய்'' என்று முடிவடையும் பாவைப் பாடல் மரபாகப் பரிணமித் திருக்கவேண்டும் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். இதனை நிறுவும் வண்ணம் ஒரு கல்வெட்டுக் குறிப்பு கண்டறியப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம் காங்கேயம் வட்டம் கற்றான்காணி (கத்தாங்கண்ணி) என்ற ஊரிலுள்ள ஹொய்சள வீர வல்லாளனின் கி. பி. 14-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில், ''திருவம்பாவை நாள் பத்துக்கு'' என்ற வாசகம் காணப்படுகிறது. ''ஏலோ அம்பா வாய்ப் பாடல்'' என்பதே அம்பாவை என்றும் திருவம்பாவை என்றும் திரிந்து வழங்கியுள்ளது என்பது இதனால் புலனாகிறது.*

**சீ. இராமச்சந்திரன்**
**கல்வெட்டாய்வாளர்**

# 5 புழல் முதற்குலோத்துங்க சோழன் கல்வெட்டு

**ஆய்வுக் குறிப்பு**

துறையில் நடைபெற்றுவரும் கல்வெட்டு முனைப்புத் திட்டப் பணியினை முன்னிட்டுத் திருப்பாலைவனத்தில் நடைபெற்ற கல்வெட்டுப் படியெடுக்கும் பணியினைத் துறையின் சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப. அவர்கள் 8-10-2004 அன்று நேரில் சென்று பார்வையிட்டார். அன்றே பழவேற்காட்டில் உள்ள சிவன் கோயில், பெருமாள் கோயில்களையும், கல்வெட்டுகளுடன் கூடிய டச்சுக் கல்லறைகளையும், மாலையில் பொன்னேரி மற்றும் புழல் கோயில்களையும் அங்குள்ள கல்வெட்டுகளையும் பார்வையிட்டார். இந்த மேற்பார்வைப் பயணத்தின் போது புழலில் புதிய கோயில் ஒன்றின் கருவறைக்குள் விதானத்தில் ஒரு கல்வெட்டுள்ள கல் இருப்பதை அறிந்து, தன்னுடன் வந்த நிழற்படக்காரர் மூலம், டிஜிடல் நிழற்படக் கருவியில் அக்கல்வெட்டினைப் பதிவு செய்து கொண்டுவந்து கொடுத்ததன் மூலம் அக்கல்வெட்டின் வாசகமும் ஆய்வுக் குறிப்பும் இங்கு இடம் பெறுகிறது.

புழலில் திருமூலநாதசாமி கோயில் என்ற சிவன் கோயில் உள்ளது. அக்கோயிலிலிருந்து முன்னரே ஏழு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. (482–488/1920) அவற்றுள் காலத்தால் முந்தியது இராசநாராயண சம்புவராயரின் 4-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். திருக்கடவூர் முதலியார் என்பவரைத் தலைவராகக் கொண்ட மடத்திற்குப் புழல் ஊர்மக்கள் 5000 குழி நிலத்தினைச் சர்வமான்ய இறையிலியாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு காட்டுகிறது. அதே மன்னனின் 8-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் புழல் ஊரவர்கள் பெரும்பற்றப்புலியூரில் இருக்கும் செல்வத்திருவாரூர் கீழைமடத்தைச் சேர்ந்த வாகீஸ்வர தேவருக்குச் சில கொடைகள் கொடுத்ததைக் குறிக்கிறது. மேலும் விஜயநகரர் கால மகாமண்டலேஸ்வரன் வீரதேவராயனின் கல்வெட்டு ஒன்றும், அச்சுததேவராயரின் கல்வெட்டு ஒன்றும் இக்கோயிலில் உள்ளன.

வீரதேவராயரின் கல்வெட்டு மூலம் புழலுக்கு ராயசுந்தரி நல்லூர் என்ற பெயர் இருந்ததையும், புழல் கோட்டமான

விக்கிரமசோழ வளநாட்டில் அமைந்த புழல்நாட்டுப் பிரிவில் இவ்வூர் இருந்ததென்றும் அறிகிறோம். இப்பெயர்களில் இருந்து இவ்வகை நாட்டுப்பிரிவு விக்கிரமசோழன் காலத்தில் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதலாம்.

தற்போது டிஜிடல் படமெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டு வாசகம் வருமாறு :

1. . . . [குலோ]துங்
2. க சோழ தேவ
3. ற்கு யாண்டு
4. [௨]௭ ஆவது
5. [ஜ]யங் கொண்
6. ட சோழ மண்
7. டலத்து ராஜே
8. ந்த்ர சோழ வள
9. நாட்டு புழல்
10. நாட்டு இராஜ
11. நாராயணச் சது
12. வேதி மங்க
13. லத்து ஸபை
14. யக்குச் சமை
15. ந்த வட்டமணி
16. த்தோணய ஸ
17. ஹஸ்ரனும் குமி
18. ண்டிலி கூளிய்
19. ஸ[ஹஸ்ர]னும் இரா
20. யூர்க் குமார நம்
21. பி ஸஹஸ்ரனு
22. ம் குமிண்டிலி
23. பெரிய நம்பி
24. ஸ[ஸ]ஹஸ்ரனு
25. ம் வட்டமணி ம
26. ாதவ பட்டனும்
27. முப்பிரால் கண
28. பதிக் கிரம வித்த
29. னும் இவ்வூற்க்
30. கு [நன்தெய] . . .

இக்கல்வெட்டின் தொடக்கமும் இறுதியும் இல்லை. முதற்குலோத்துங்கனின் [2]7 ஆம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்தது. (கி.பி. 1097) இராஜராரராயணச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் உள்ள இராஜநாராயணஞ் என்பது முதற் குலோத்துங்கனின் பட்டப் பெயர் ஆதலின், இது அவ்னது கல்வெட்டே என உறுதியாகக் கூறலாம். இச்சதுர்வேதிமங்கலம் சபைக்குத் தொடர்புடைய வட்டமணி தோணய சகஸ்ரன், குமண்டிலி கூளி சகஸ்ரன், இராயூர் குமார நம்பி சகஸ்ரன், குமிண்டிலி பெரியநம்பி சகஸ்ரன். வட்டமணி மாதவ பட்டன், முப்பிரால் கணபதிக் கிரமவித்தன் ஆகியோர் சேர்ந்து செய்த ஏதோ ஒரு செயலை இக்கல்வெட்டு பதிவு செய்துள்ளது எனலாம்.

இக்கல்வெட்டு மூலம், புழல் விக்கிரமசோழன் காலத்திற்கு முன்னர், அதாவது முதற் குலோத்துங்கன் காலத்தில் சதுர்வேதி மங்கலமாக இருந்தது என்றும், இராஜேந்திர சோழ வளநாட்டில் அமைந்த புழல் நாட்டுப் பிரிவில் இருந்தது என்றும் தெரிகிறது. இவ்வகைப் பிரிவு, பெயரடிப்படையில் நோக்க முதல் இராஜேந்திரன் காலத்தில் ஏற்பட்டிருக்கலாம் என்று கருத இடம் அளிக்கிறது. எனவே குலோத்துங்கன் காலத்தில் சதுர்வேதி மங்கலமாக இருந்து பின்னர் விக்கிரமசோழன் காலத்தில் நல்லூராக (வெள்ளான் வகையூராக) 'ராய சுந்தரி நல்லூர்' என்ற பெயரில் நிர்வாக மாற்றம் பெற்றுள்ளது என்று ஊகிக்க இடம் தருகின்றது.

இக்கல்வெட்டிருப்பதை அறிந்து புதிதாகப் படியெடுத்துப் படித்ததன் மூலம், புழலின் வரலாற்றினை முதற்குலோத்துங்கன் காலம் முதல் அறிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**முனைவர். நா. மார்க்சீயகாந்தி**
**முனைவர். ஆ. பத்மாவதி**

## பாட்டுக் கூற்று

முற்காலத்தில் அரசவைகளில் காலத்தை அறிவிப்பதற்காகக் கடிகை மாக்கள் என்ற பெயரில் சிலர் இருந்தனர் என இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். பாடல் வடிவில் காலத்தை - ''இன்ன நாழிகை'' என்ற குறிப்பை இவர்கள் அறிவிப்பார்கள். இத்தகைய கடிகையார்களுக்குப் ''பாட்டுக் கூற்று'' என்ற பெயரில் காணியாட்சியும் நிலமும் வழங்கப்பட்டிருந்தன எனத் திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டம் பெயரில் காணியாட்சியும் நிலமும் வழங்கப்பட்டிருந்தன எனத் திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டம் பெருமாநல்லூர் விஜயப் பெருமாள் கோயிலிலுள்ள சோழர் காலக் கல்வெட்டொன்றால் தெரியவருகிறது. இவ்வூர்த் தேவர்கள் திருவிழாவுக்குப் பாட்டுக் கூற்று கடிகையான் பரவாதி மங்கலவன் சந்திரசேகரனான நூற்றெண்மப பேரரையனுக்கு''

**கல்வெட்டு வாசகம்**

''இவ்வூர்த் தேவர்கள் திருவிழாவுக்குப் பரவாதி ம[ங்க]லவன் சந்திரசேகரனான நூற்றெண்மப் பேர[ரைய]னுக்குப் புத்தேரி உள்ளை நாவிசன் திருத்தின குன்டில் களம்பூவுடையான் திருத்தின குண்டில்களும் தடி பலவினால் குழி நானூற்றுக்கு..''

# 6

# தருமபுரி மாவட்டம் பிக்கனஹள்ளி - புதிய கற்காலக் கருவிகள் பாகல்பட்டி - புதிய செய்திகள்

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர்
தருமபுரி

## பிக்கனஹள்ளி - புதிய கற்காலக் கருவிகள்

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பாலக்கோட்டிருந்து ராயகோட்டை செல்லும் சாலையில் வெள்ளிச்சந்தையை அடுத்து உள்ளது பிக்கனஹள்ளி கிராமம். இங்கு மேற்கொண்ட ஆய்வில் சுமார் 16 புதிய கற்காலக் கைக்கோடாரிகள் (Celt) கண்டறியப் பட்டது. திரு. மல்லுப்பட்டி சுப்ரமணி அவர்களின் வீட்டிற்கு அருகில் உள்ள மாரியம்மன் கோயிலில் நான்கு கற்பலகைகளை கொண்டு அடுக்கி அமைத்த மேடையருகே சில கற்களை நட்டு மாரியம்மன் என்று வழிபடுகின்றனர். இந்த இடத்தில்தான் குவியலில் வைத்துப் புதிய கற்காலக் கைக் கோடாரிகளையும் மாரியம்மனாக வழிபட்டு வருவது அறியப்பட்டது. இவற்றில் 11 கைக்கோடாரிகள் நல்ல நிலையிலும் 5 உடைந்த நிலையிலும், மற்றும் புதிய கற்கால மக்கள் பயன் படுத்திய நீள் உருண்டை, வட்டமான தட்டு போன்ற கற்களும் இங்கு காணப்படுகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் புதிய கற்காலக் கருவிகள் பல இடங்களில் கிடைத்துள்ளன. அண்மையில் வத்தல்மலை அடிவாரத்தில் பொம்மிடி அருகே பல புதிய கற்கால கருவிகள் சேகரிக்கப்பட்டன. அதுபோன்று பிக்கனஹள்ளியிலும் குவியலாகக் காணப்படுவது சிறப்பிற்குரியது. இவற்றில் காணப்படும் கருவிகள் பல்வேறு அளவினையுடையன. இங்கு பிக்கிலி மலை அடிவாரத்தில் புதியகற்கால மனிதர்கள் வாழ்ந்திருக்க கூடும். இதன் பின்னணியைப் பார்க்கும் பொழுது புதியகற்கால நாகரிகம் இப்பகுதியில் வளர்ந்ததையும் உணர முடிகிறது.

அடுத்து பிக்கிலி மலை அடிவாரத்தை ஒட்டிச் செல்லும் இந்த ஆறு பாலக்கோடு வட்டம் வழியாக தருமபுரியை வந்தடைகின்றது. எனவே செழிப்பான இந்த பிக்கிலிமலை அடிவாரத்தில் நாகரிகங்கள் குறிப்பாகப் புதியகற்கால மனிதர்கள் தங்கி வாழ்ந்திருக்கலாம் என்று கருத இடமளிக்கின்றது. இவை பண்டைய நாகரிகங்கள் ஆற்றுப் படுகைகளிலேயே வளர்ச்சி பெற்றன என்பதை நிறுவும் சான்றுகளாகத் தோன்றுகின்றது.

இவ்வாறு ஆற்றின் கரை ஒரங்களிலும், தென் பெண்ணையாற்றின் கரைகளிலும் பல இடங்களில் புதிய கற்கால மனிதன் பயன்படுத்திய கல் ஆயுதங்கள் தொல்லியல்துறை நடத்திய ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளன. அவற்றில் பிக்கனஹள்ளியும் ஒன்று. இங்கு கற்கருவிகள் அதிக அளவில் ஒரே இடத்தில் காணப்படுவதே இதன் சிறப்பு.

இவ்வூரிலிருந்து இரண்டு புலிகுத்திப்பட்டான் நடுகற்கள் துறை அகழ் வைப்பகத்திற்குக் கொண்டு வரப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு புலிகுத்திப்பட்டான் நடுகல் ஊரின் வடக்கே மலை அடிவாரத்தில் காணப்படுகின்றது. இதனைக் கற்பதுக்கை போன்ற அமைப்பில் வைத்துள்ளனர். இதனைக் கோயிலாக வழிபாடு செய்து வருகின்றனர்.

இங்கு பெருமாள் கோயில் ஒன்று இருந்து அழிந்துபட்டுள்ளது. உடைந்த தூண்கள் ஊஞ்சல் போன்றவை காணப்படுகின்றன.

மேற்குறித்த வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது பிக்கனஹள்ளி சுமார் 5000 ஆண்டு பழமை வாய்ந்த ஊராகக் கருத இடமளிக்கின்றது. மேலும் புதியகற்கால நாகரிகம் வளர்ந்த இடங்களில் தருமபுரி மாவட்ட வரலாற்றில் இதுவும் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தை பிடிக்கின்றது என்பதையும் ஆய்வின் மூலம் உணர முடிகின்றது.

## 2. பரகல்பட்டி - குத்துக்கல்

தருமபுரி - சேலம் நெடுஞ்சாலையில் தருமபுரியில் இருந்து சுமார் 14 கி. மீ, தொலைவில் அமைந்துள்ளது பாகலஹள்ளி. இதனை பாகல் பட்டி என்றும் அழைக்கின்றனர். இங்கு பெருங்கற்காலப் பண்பாட்டு வகையைச் சார்ந்த கல்வட்டம், கல்திட்டை, குத்துக்கல் போன்ற மூன்று வகையான ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. கல்வட்டங்கள் சில ஆங்காங்கே காணப்படுகின்றன. பெரும்பாலும் சிதைக்கப்பட்டே காண முடிகின்றது. மேலும் இவை இப்பகுதியில் உள்ள தண்டுகாரன்பட்டி, கெஸ்கலாபுரம் போன்ற கிராமங்களிலும் ஆங்காங்கே பரவலாகக் காண முடிகின்றது.

இவற்றில் சிறப்பானவை குத்துக்கல் (Menhir) வகை. இந்த வகை ஈமச்சின்னங்கள் தருமபுரி மாவட்டத்தில் அரிதாகவே காணப்படுகின்றன. முதலில் பாலக்கோடு வட்டம் திருமலவாடி என்ற கிராமத்தில் குத்துக்கல் இருப்பது கண்டறியப்பட்டது. தற்பொழுது தருமபுரி வட்டத்தில் பாகல்பட்டியில் சாலையின் ஓரத்தில் கண்டறியப்பட்டுள்ள குத்துக்கல் சுமார் 10 அடி உயரமும் மூன்று அடி அகலமும் 1 அடி தடிப்பும் கொண்ட நிலையில் செங்குத்தாக நடப்பட்டுள்ளது. சுற்றிலும்

கற்கள் சிதறிக் கிடக்கின்றன. இறந்தவர்களை அடக்கம் செய்த இடத்தில் இதுபோன்ற கல் நட்டுவைக்கும் பழக்கத்தை நம் முன்னோர்களாகிய பெருங்கற்கால மக்கள் வழக்கமாக கொண்டிருந்தனர். ஒரு தலைவன் அல்லது உயர்ந்தோன் என்ற அடிப்படையில் அங்குள்ள கல்வட்டங்களில் ஒன்றில் மட்டுமே இவ்வகைக் குத்துக்கல் நடப்பட்டுச் சிறப்புச் செய்யப் படும். இந்த குத்துக்கல் வகை ஒரு சிலருக்கு மட்டுமே நடப்படுவதால் இவை அரிதாகவே காணப்படுகின்றன.

பின்குறிப்பு :

*அண்மையில் ச. செல்வராஜ் தொல்லியல் அலுவலர் தருமபுரி அவர்களால் கள ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.*

## சென்னைக்கு அருகில் கோல்கொண்டா சுல்தான் கல்வெட்டு

திருவள்ளூர் மாவட்டம் சத்தியவேட்டில், கி.பி. 1686-ஆம் ஆண்டைச் சேர்ந்த கோல்கொண்டா (குத்பு ஷாஹி) சுல்தான் அபுல்ஹசனின் கல்வெட்டு ஒன்று முன்னர் கண்டறியப்பட்டு இந்தியத் தொல்லியல் துறையின் 1912-ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு ஆண்டறிக்கையில் 34-ஆம் எண்ணின்கீழ் குறிப்பிடப் பட்டுள்ளது. (A.R.E. 34/1912)

பூந்தமல்லி வட்டம் திருநின்றவூரில் ஏரிகாத்த ராமர் கோயிலின் பின்புறம் உள்ள ஏரியின் மடைக்கல்லில் பொறிக்கப் பட்டுள்ள ஒரு கல்வெட்டு. கல்வெட்டு படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தின் கீழ் அண்மையில் படியெடுக்கப்பட்டது. அக்கல்வெட்டு கி. பி. 1675-ஆம் ஆண்டுக்குரியது. கோலக்குண்டை குத்புசாபு சுரதான் அப்துல் பாதுஷாகானின் கீழ், ஆந்திர மாநிலத்தில் வட பெண்ணையாற்றங்கரையில் அமைந்துள்ள கண்டிக்கோட்டையைத் தலைநகராகக் கொண்டு பெம்மசானிச் சிற்றரசர் குமாரத்திம்ம நாயக்கர் ஆளும் போது, அமரகிராமம் திருநின்றையூர் ஏரியின் பாசன நிலங்களாக நாணம்பட்டு முதலான ஊர்களை அறிவித்த செய்தி இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது.

கோல்கொண்டா சுல்தான் ஆட்சியில், கண்டிக்கோட்டை பெம்மசானிச் சிற்றரசர்கள் நிர்வாகத்தில் சென்னையையொட்டிய பகுதிகளில் நீர்ப்பாசன வசதிகளும் வேளாண்மையும் மேம்படுத்தப் பட்டன என்பதற்கு இக்கல்வெட்டு சான்றாகத் திகழ்கிறது.

— **எஸ். இராமச்சந்திரன்**

# 7 ஆத்மநாதர் கோயிலின் அழகுமிகு மண்டபங்கள்

*அர. வசந்தகல்யாணி*, கல்வெட்டாய்வாளர்
*கோ. முத்துசாமி*, காப்பாட்சியர்

தமிழகக் கட்டடக்கலை காலந்தோறும் வளர்ச்சியுற்றுள்ளதை நாம் கோயில்கள் மூலம் அறிகின்றோம். பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகரர், நாயக்கர், மராட்டியர், சேதுபதிகள், நகரத்தார் என இன்றைய காலகட்டம் வரை பல்வேறு வகையாலும் இக்கட்டடக்கலைப்பணி மாற்றமும் ஏற்றமும் பெற்றது. ஒவ்வொரு அரச மரபினர் காலத்திலும் ஒரு கலைப்பாணி உருவாகியது. அவ் வகையில் பார்க்கும் போது விஜயநகரர் காலந் தொடங்கிக் கட்டடக் கலையில் மண்டபங்கள் மற்றும் கோபுரங்கள் பெருமளவு போற்றப்பட்டு வளர்ச்சியின் உயர் நிலையினை அடைந்ததைக் காண்கிறோம். விஜயநகரர் காலத்தில் ஊஞ்சல் மண்டபம், கல்யாண மண்டபம், துலாபார மண்டபம், வசந்த மண்டபம், நவராத்திரி மண்டபம் போன்றவை அழகிய சிற்பங்களுடன் கூடிய தூண்களுடன் காண்போர் கண்ணையும் கவனத்தையும் கவரும் வண்ணம் கோயிற்பிரகாரங் களில் அமைக்கப்பட்டன. இவ்வாறு மண்டபங்களை அமைக்கும் பணியில் தொடர்ந்துவந்த நாயக்கர், சேதுபதிகள் ஆகியோரும் ஈடுபாடு கொண்டனர். எனவே கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் இந்தப்பணி கட்டடக்கலையில் சிறந்ததோர் இடத்தைப் பிடித்தது.

அவ்வகையில் ஆவுடையார் கோயில் என்னும் ஊரிலுள்ள ஆத்மநாதர் கோயிலில் குறிப்பிடத்தக்க அளவு மண்டபங்கள் அமைக்கப்பட்டதையும் அவை கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டின் கலை வளர்ச்சியை அறிய உதவும் அளவுகோலாக அமைந்தது என்பதையும் இக்கட்டுரையில் காண்போம்.

## கோயில்

திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயில் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியிலிருந்து பதினான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந் துள்ளது. இவ்வூர் திருப்பெருந்துறை என்று சமயக்குரவரான மாணிக்கவாசகரால் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் மிழலைக்கூற்றத்து நடுவிற் கூற்றம் பிரமதேசம் தனியூர் திருப்பெருந்துறையான பவித்ர மாணிக்க சதுர்வேதி மங்கலம் என்றழைக்கப்பட்டுள்ளது. இங்கு அமைந்துள்ள கோயிலே ஆவுடையார் கோயில் என்பது. காலப்போக்கில் கோயிலின் பெயரே ஊரின் பெயராக மாறி விட்டது. கடற்கரையையொட்டி ஆற்றங்கரையில் இவ்வூர் அமைந்துள்ளது. திருக்கோயில் ஊரின் நடுநாயகமாக விளங்குகிறது. நான்கு புறமும் தேரோடும் பெரிய வீதிகளுக்கு நடுவே எழுப்பப்பட்டுள்ள திருக்கோயிலும் அதில் புனித தீர்த்தங்களும் அற்புதமாக வடிவமைக்கப்பட்ட மண்டபங்களும் சிறப்பு மிக்கவை.

ஆவுடையார் கோயிலில் வீற்றிருக்கும்இறைவன் ஆத்மநாதர் தெற்குப் பார்த்து காட்சித் தருகிறார். இது வேறு எங்கும் இல்லாத தனிச்சிறப்பாகும். மேலும் கருவறையில் இறைவன் காட்சி கொடுப்பது பிரணவ பீடம் என்ற அமைப்பாகும். அதாவது பூஜாபாகமாகிய ருத்ர பாகம் அமைக்கப்படாமல் ஆவுடையார் மட்டும் காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே ஆவுடையார் கோயில் என்னும் பெயர் வழக்கு ஏற்பட்டுள்ளது போலும். இந்த பீடத்தின் மீது உலோக வேலைப்பாடு மிக்க குவளை ஒன்று சார்த்தப்படுகிறது. தினந்தோறும் இதற்கே சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. இறைவி யோகாம்பாள் இறைவனைப் போலவே தெற்கு நோக்கிக் காட்சியளிக்கிறார். ஆனால் அம்மன் சந்நதியில் மற்ற சிவ தலங்களில் உள்ளது போல் கற்சிற்பம் அமைக்கப்பட வில்லை. யோகாம்பிகையின் இரண்டு திருவடிகளே அங்குள்ள கல் ஜன்னலின் வழியே பார்க்குமாறு அமைக்கப்பட்டுள்ளது.

குருந்தமரக்காட்டில் இறைவன் வாதவூர் அடிகளுக்குக் காட்சிகொடுத்து உபதேசம் செய்து அருளிய தலம். உபதேசம் பெற்ற வாதவூர் அடிகள், சமயக் குரவர் நால்வருள் ஒருவராக மாணிக்கவாசகர் என்ற திருநாமம் பெற்றார்.

### அழகுமிகு மண்டபங்கள்

முன்னமே கண்டதுபோல் இக்கோயிலில் அமைந்துள்ள மண்டபங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தனித் தன்மையுடன் மிளிர்கின்றன.

### முன் மண்டபம்

இத்திருக்கோயிலின் முன்மண்டபம் அழகிய வேலைப்பாடு கொண்ட தூண்களோடு நம்மை வரவேற்கிறது.

### ரகுநாத பூபால மண்டபம்

முன்மண்டபத்தை அடுத்துத் தெற்காக அமைந்த மண்டபம் ரகுநாத நாயக்கரால் கட்டப்பட்டதால் அது, ரகுநாத பூபாலன் மண்டபம் என்று அழைக்கப் படுகிறது. 'ஆவுடையார் கோயிற் கொடுங்கை அழகு' என்ற பழமொழி உருவாகக் காரணமாக இருந்த மண்டபம். இதன் மேல் விதானத்தில் நான்கு பக்கமும் தாழ் வான கொடுங்கைகள் ஐந்து வகைக் கம்பிகளால் இணைக்கப்பட்டது போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. கொடுங்கையின் மூலைப்பகுதிகள் பெரிய தாமரை இதழ் விரிந்ததுபோல் அரை வட்டமாக வளைந்துள்ளன. வளைந்த வெளிப்பகுதியில் பாம்பு, பல்லி, குரங்கு, முதலை, உடும்பு முதலியன புடைச்சிற்பமாகக் காட்சியளிக்கின்றன. மண்டபத்தைத் தாங்கி நிற்கும் தூண்களில் பல மன்னர்களின் உருவங்கள் இறைவனை கைகூப்பி வணங்கும் வண்ணம் வடிக்கப்பட்டுள்ளன. ஒரு தூணில் மேற்குப் பார்த்து வணங்கியபடி நாயக்க மன்னர் கம்பீரமாகக் காட்சி தருகிறார். அவரின் தலைக்கு மேற்பகுதியில் ரகுநாத பூபாலன் மண்டபம் எனப் பெயர் பொறிக் கப்பட்டுள்ளது. கிழக்கு மேடைப் பகுதியில் இதுபோல் பத்துக்கு மேற்பட்ட மன்னர் களின் பெயர்கள் தூண்களில் வெட்டப்பட்டுள்ளன.

பூபால மண்டபத்தில் மேற்குப் பகுதியில் நந்திகேச மாணிக்க வாசகர் சந்நதி அமைந்துள்ள மண்டபத்தை நாற்பதுக்கும் மேற்பட்ட கற்றூண்கள் தாங்கி நிற்கின்றன. இம்மண்டபத் தூண்களில் பெயர் பொறிக்கப்பட்டு மன்னரின் உருவங்கள் காணப்படுகின்றன. மேலும் தூண்களில் சிங்கம், மயில், கொடிப்பெண் நடனமிடும் நடனக்குழு, ஊளையிடும் நரி மற்றும் யானை, யாளி முதலியன புடைச்சிற்பங்களில் வடிக்கப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தின் மேல்விதானத்தில் தமிழகச் சிவாலயங்கள் தோற்றம் மற்றும் பெயரிபுராணம் திருவிளையாடற் புராணம் போன்ற புராணக் காட்சிகள், இயற்கை வண்ண ஓவியங்களால் அழகாக தீட்டப்பட்டுள்ளன. மொத்தத்தில் நாயக்கர் காலச் சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை போன்றவற்றுக்கு இம்மண்டபம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதை உணரலாம்.

***பஞ்சாட்சர மண்டபம்***

முதலாவது இராஜகோபுரத்தை அடுத்து அமைக்கப்பட்டு உள்ள இம்மண்டபம் 1) கனகசபை 2) குதிரைச்சாமி மண்டபம் என்ற பெயர்களிலும் வழங்கப்படுகிறது.

இம்மண்டபத்தில் 48 பெரிய தூண்கள் மேல் விதானத்தைத் தாங்கி நிற்கின்றன. தூண்களில் அடி முதல் நுனி வரைப் பல்வகைச் சிற்பங்கள் மிக எழிலாக வடிக்கப்பட்டுள்ளன. இதில் (1) அமைச்சர் மாணிக்க வாசகர் (2) குதிரை வீரனாக வந்த சிவபெருமான் (3) அமர்ந்த நிலையில் அரிமர்த்தன பாண்டியன் (4) குறுநிலத் தலைவன் போன்ற உருவங்கள் குறிப்பிடத்தக்கன. மேலும் குதிரைகளின் கீழ் ஊளையிடும் நரிகள், நடனமாதர்கள், குள்ளபூதங்கள், இறை உருவங்கள், கொடிப்பெண்கள் போன்ற புடைச் சிற்பங்களும் மிக நேர்த்தியாக வடிக்கப்பட்டுள்ளன.

மேல்விதானத்தில் பல்வகைப் புராணக்காட்சிகள், பாண்டிய நாட்டில் திருஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றுதல், பாண்டிமாதேவி திருஞான சம்பந்தப் பெருமானை வணங்கி வரவேற்றல் முதலானவை மிக எழிலாக மூலிகை வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தின் மேல் விதானத்தில் 5 கலைகளின் உருவம், 11 மந்திரங்களின் உருவம், 36 தத்துவங்கள், 51 அட்சரங்கள் (வண்ணங்கள்), 81 பதங்கள், 224 புவனங்கள் என இந்த 6 வகை அமைப்புகள் புடைச்சிற்பங் களாகக் கல்வெட்டுகளுடன் காட்சி தருகின்றன. எனவே, இவை ஆறும் உலகத் தத்துவங்கள் ஆகின்றன. மொத்தத்தில் இந்தப் பஞ்சாட்சர மண்டபம். இக்கோயிலின் கலை, அறிவியல், கணிதஇயல், ஆகியவற்றை எடுத்துக் கூறும் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கிறது என அறியலாம்

### சேதுபதிகள் மண்டபம்

பஞ்சாட்சர மண்டபத்தை அடுத்து அமைந்துள்ளது இரண்டாம் கோபுரம் ஆகும். இரண்டாம் கோபுரத்தைக் கடந்து உள்ளே செல்லும் பொழுது முதலாவதாக உள்ளது சேதுபதிகள் மண்டபம் ஆகும். இம்மண்டபத்தை இராமநாதபுரம் சேதுபதிகளும், புதுக்கோட்டை சமஸ்தானத் தொண்டைமான்களும் வடிவமைத்துள்ளனர். இம்மண்டபத்தின் தூண்களில் இம்மன்னர்களது முழு உருவமும் மற்றும் அவர்தம் தேவியர் மற்றும் அமைச்சர், இராஜகுரு போன்றவர்களின் சிற்பங்களும் அவர்களின் பெயர்கள் கல்வெட்டிலும் காணப்படுகின்றன.

### நிருத்த மண்டபம் (நடன சபை)

இம்மண்டபம் சிதம்பரத்தில் உள்ள ஆடவல்ல பெருமானின் மண்டபத்தைப் போல் பொன் தகடுகளை வேய்ந்த மேற்கூரை போல் கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் மிகஎழிலான சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

இறைவன், இறைவி வேடன் குறத்தி நடனமாடும் காட்சி, புலையன், புலத்தியர் நாட்டுப்புறக்கலை நடத்தும் காட்சி போன்றவை மிக நேர்த்தியாகப் பார்ப்போர் உள்ளத்தை கவரும் வண்ணம் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளன.

மேலும் பாண்டிய மன்னனின் அமைச்சராகவும், ஆத்மநாதரின் அருளைப் பெற்ற அடியவராகவும் மாணிக்கவாசகப் பெருமான் இரு தூண்களில் நின்ற வடிவில் காட்கி தருகின்றார், இம்மண்டபத்தில் சுமார் 15 அடி உயரத்திற்கு ஒரே கல்லால் ஆன இரண்டு விளக்குகள் நிறுத்தப்பட்டுள்ளன.

### சுந்தரபாண்டிய மண்டபம்

இம்மண்டபம் தேவசபை எனவும் அழைக்கப்படுகிறது. இம்மண்டபத்தை 20 கல்தூண்கள் தாங்கி நிற்கின்றன. இம்மண்டபத்தைச் சுற்றிலும் சுவர்களில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

### அமுத மண்டபம்

தேவசபையை அடுத்து அமைந்துள்ளது மகா மண்டபம் ஆகும். இம்மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள மேடையில் இறைவனுக்கு பிரசாதங்கள் நிவேதனம் செய்யப்படுகின்றன. எனவே, இது அமுதமண்டபம் என்று அழைக்கப்படுகிறது.

### அர்த்த மண்டபம்

மகா மண்டபத்திற்கும் மூலவர் உண்ணாழிக்கும் இடையில் அமைந்துள்ள இம்மண்டபத்தில் இறைவனுக்குரிய பூசைப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

### ஆனந்த மண்டபம்

மூலவர் ஆத்மநாதர் அமைந்துள்ள கருவறை ஆனந்தமண்டபம் என்று அழைக்கப்படுகிறது. ஆத்மநாதரை வழிபடும் மெய்யன்பர்களுக்கு இறைவன். மகிழ்வைப் பெருக்குவதால் இம்மண்டபம் ஆனந்த சபை என்றும் வழங்கப்படுகின்றது

## தியாகராஜன் மண்டபம்

மூன்றாம் திருச்சுற்றில் வடமேற்கு மூலையில் இம்மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் 25 அடி உயரத் தூண்கள் பல வகைச் சிற்பங்களுடன் நிறுவப் பட்டுள்ளன. முன்மண்டபத்தின் மேல்விதானத்தில் 12 சதுர கட்டங்கள் அமைக்கப் பட்டு அதில் 12 இராசிகளும், புடைச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இந்தச் சதுரப் பகுதியில் பல இடங்களில் மேல் இருந்து கீழாக ஐந்து வளையங்கள் ஒன்றினுள் ஒன்றாகக் கோத்துத் தொங்கவிடப்பட்டுள்ளன. இந்த வளையங்கள் கருங்கல்லாலேயே செதுக்கியிருப்பது தமிழகக் கல் தச்சர்களின் கலை நுணுக்கத்தை புலப்படுத்துகின்றது.

இரண்டாவதாக உள்ள மண்டபத்தில் முகப்பிலுள்ள இரு தூண்களில் ஒன்றில் கரும்புவில்லுடன் தேர் ஏறிவரும் மன்மதனும் மற்றொரு தூணில் அன்னவாகத்தில் ரதியும் பவனி வருவது போல் எழிலான சிற்பம் காட்சி தருகிறது. இம்மண்டபக் கொடுங்கையின் உட்பக்கத்தில் ஐந்து இரும்புக் கம்பிகள் போல் கருங்கல்லில் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலில் உள்ள 10 மண்டபங்களிலும் 3 திருச்சுற்றுகளிலும் அழகிய வேலைப்பாடு மிகுந்த சதுர தூண்கள், எண்பட்டை தூண்கள், உருண்டை தூண்கள், செவ்வகத் தூண்கள் என 500க்கு மேல் தூண்கள் அமைக்கப் பட்டுள்ளன. இத்தூண்களில் இறை உருவங்கள், மன்னர்களின் உருவங்கள் நாட்டியமகளிர் கொடிப் பெண்களின் உருவங்கள், பல்வேறு விலங்குகளின் உருவங்கள், மீன்கள், மலர்கள் போன்றவை மிக நேர்த்தியாகச் செதுக்கப் பட்டுள்ளன. இத்திருக்கோயிலில் அமைந்துள்ள மண்டபங்களைத் தாங்கி நிற்கும் பெருமையுடன் மேல் விதானத்தில் இருந்து தாழ்வாக வடியும் நீண்ட, வேலைப் பாடு மிக்க அளவில் மிகப் பெரியதான கொடுங்கைகளையும் தாங்கி நிற்பவை இத்தூண்களே. கோயிலில் ஒவ்வொரு முறை வலம்வரும் போதும் நமக்கு புதிது புதிதாக அரிய பல சிற்பங்களை படம்பிடித்து காட்டுவதும் இங்குள்ள தூண்களே.

## தலவிருட்சம்

இக்கோயிலில் குருந்தமரம் தலவிருட்சமாக உள்ளது. இத்தலவிருட்சமான குருந்தமரம் கோயிலில் மூன்றாம் பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் மிக பசுமை யாகக் காணப்படுகிறது,

## புனித தீர்த்தம்

திருபெருந்துறை எனும் இத்தலத்தில் கிணறுகளும், திருக்குளங்களும் கோயிலின் உள்ளும், கோயிலுக்கு வெளியேயும் அமைந்துள்ளன. இவற்றுள் 9 வகைத் தீர்த்தங்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானது அக்னி தீர்த்தம் ஆகும், இந்தத் தீர்த்தக் குளம் கோயிலின் தென்மேற்கில் அமைந்துள்ளது. அக்னியானது தீயவற்றை அழிப்பது போல் அக்னிதீர்த்தமும் பாவத்தைப் போக்கி அனைவருக்கும் நன்மை தருவதாக உள்ளது.

### கோயில் கட்டப்பட்ட காலம்

இரண்டாம் வரகுண பாண்டியனின் அரசவையில் முதன்மை அமைச்சராக விளங்கியவர் திருவாதவூர் அடிகள் (மாணிக்கவாசகர்) ஆவார். இவர் திருப் பெருந்துறைக்கு வந்து இறைவனின் அருள்வாக்கின்படி இங்கு கோயில் கட்டிய தாக வரலாறு கூறுகிறது. அதன்பிறகு சோழர், பாண்டியர், விஜயநகரத்தார், நாயக்கமன்னர்கள், சேதுபதிகள், தொண்டைமான்கள், திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்கள் வரை படிப்படியாக அவரவர் காலங்களில் தமது கட்டடக்கலை ஆற்றலை வெளிப்படுத்தும் வண்ணம் கோபுரத்தையும், மண்டபங்களையும் கட்டி விரிவாக்கம் செய்துள்ளனர் என்பது இங்கு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை வளர்ச்சி நிலைகளால் அறியப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய விக்கிரமங்கலம் சோளீஸ்வரர் சிவன் கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவரில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 23-ஆம் ஆட்சியாண்டில் கட்டப் பட்ட கல்வெட்டு ஒன்று இவ்வூர் வணிகர் நகரமாக இருந்ததையும், இவ்வூரின் பெயர் விச்கிரமசோழபுரம் என்பதையும் தெரிவிக்கிறது.

இவ்வூரில் கி.பி. 9, 10 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இரண்டு புத்தர் சிலைகள் காணப்படுகின்றன.

### கல்வெட்டு வாசகம்

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்
கவத்திகள் மதுரையும்
கருவூரும் பாண்டியன்
முடித்தலையும் கொண்டருளிய
ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு உஙு வது
விக்கிரம் சோழபுரத்து நகரத்தோம் விவத்தை
பண்ணின படி இவ்வூர் கிடாரங்கொண்ட
சோழப்பெருந்தெருவிலே குளங்கள்
பொதுவாக்கி . . . . இரண்டு மங்கல
வீதியிலும் அளந்து முதலான குழி மாகண
மனையிலே விழுக்காடு விட . . . . .
அனுபவிக்குமிடத்து விச்சு தடுத்து
பாய்சுதல் நெல்லுநடுதல் . . . . விவத்தை
பண்ணிவோம் விக்கிரம சோழபுரத்து
நகரத்தோம்.

# Status report on the Archaeological excavations at Andipatti and Modur

Excavation Wing

The archaeologists carryout excavation to reveal the cultural habitation of a site. The antiques collected from the excavated trenches gives the authentic evidences for the history and culture of the sites. In the year 2004-05 excavations were carried out at two sites namely Andipatti in Tiruvannamalai District and Modur in Dharmapuri Distriet.

**Historical importance of the sites:**

The village **Andipatti** an important historical site datable to 3rd century BCE onwards, is situated at 15 km. from Chengam in Chengam Taluk of Tiruvannamalai district. It lies in the Latitude of $12^0$ 13'N and Longitude of $78^0$44' E

Chengam was an ancient capital city of chieftain called Nannan during Sangam Age. In the year 1968, 143 lead coins belonging to the 2nd century CE were found at Andipatti. The coins bear inscriptions in archaic Tamil script and mention the name of the King as *Cendan Athinan Ethiran.* Presently these coins are in possession of Government Museum, Chennai. This department already noticed a good number of hero stones in and around Chengam, and published them entitled "Chengam Nadukarkal-1975.

The village **Modur** (Latitude: $12^0$ 13' N and Longitude: $78^0$ 10' E) is situated at 15 km from Dharmapuri town in Palacode Taluk of Dharmapuri District.

The antiquity of Modur village goes back to the Neolithic age as number of Neolithic celts and associated potteries and Megalithic appendages are found in this locality.

Besides this, the occurrences of historical hero stones of Hoysala period infer the continuous human inhabitation of this place. On account of this, it is ascertained that this village might have been inhabited since Neolithic through 14th century CE.

On the natural rock in front of the Perumal temple of Modur, a Hoysala period inscription is noticed. In addition to this, hero stone with vatteluttu inscription, reading Kovisaya was also found near this temple. Palaeographically, it is datable to 6th century CE. Since the letter *sa* is written in Brahmi character this inscription might be the transitional period from Brahmi to vatteluttu. The half-relief sculpture depicted on the hero stone has a male and female figure. The other vatteluttu was noticed on the mandu near the mandapa (western side of the hillock).

Hence, it is proposed to excavate the respective sites in the year 2004-2005.

After getting the financial allotment of Rs.5 lakhs for the excavations of both sites from Government of Tamilnadu, permission from the Central Archaeological Survey of India was obtained. The field officers were appointed and directed to obtain the prevailing local wages for the labourers.

Before the commencement of the exact excavation work, preliminary actions were taken by conservation wing in selecting mounds through contour survey. Familiarizing the district administration about the excavation work and other related guidelines were taken up in a systematic manner.

A Launch meeting with the District Collectors, Revenue Officials, Village dignitaries and Village people was arranged. Thiru T.S. Sridhar, I.A.S., Special Commissioner of Archaeology briefed the District officers about the importance of excavation through Power Point presentation. The sites were also explored and antiquities collected by the Special Commissioner of Archaeology.

For the first time a scientific method of "Global Positioning System" and "Total Station" were adopted to locate the habitation mounds for excavation at respective sites. The department of Remote Sensing, Anna University rendered their co-operation in this endeavour.

A PERT chart was prepared for the excavation work and instruction was given to the Department Officials to carry out work according to time schedule. The purpose of this chart was to identify the activities involved in excavation, determine the time frame in which activities will be executed and fix inter-se connection and responsibility among activities and officers. Accordingly, Archaeological excavation was conducted at Andipatti and Modur village; the work was commenced in December 2004 and completed in April 2005 in a systematic manner. An exhibition of the excavated artefacts was held at DPI on 25-4-05 in which the Special Commissioner Thiru T. S. Sridhar and District Collector Thiru Sudip Jain participated.

Interestingly, both the sites yielded invaluable antiquities. Brahmi script potsherds, iron objects, black and red ware potsherds, red slipped ware potsherds, terracotta beads, carnelian beads were collected from Andipatti excavation. At Modur for the first time in Tamilnadu, a Neolithic habitation site was excavated. Large collections of Neolithic celts, unfinished celt, spheroid rubber, oval rubbers discoid, hand hammers, cylinderical pestles, grooved hammers were unearthed. These invaluable antiquities help to fix the cultural chronology of the sites.

# 9 செங்கற்பட்டு மாவட்ட ஆவணங்கள்

புலவர் பா. கண்ணையன்

தமிழகத்தில் எழுதுவதற்குக் காகிதம் வருவதற்கு முன் பனையோலைகளைப் பயன்படுத்தினர். பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டவை ஓலைச்சுவடிகள் எனப்பட்டன. ஓலைச் சுவடிகள் மூன்று வகைப்படும். அவை

1. இலக்கியம், இலக்கணம், கணிதம், வரலாறு போன்ற நூல்கள்.
2. கிரயம், தானம், கடன் ஒப்பந்தம் போன்ற சாசனங்களும் அரசு ஆணைகளும் பட்டயங்களும்.
3. கடிதங்கள், நாட்குறிப்புகள், வரவு செலவுக் கணக்குகள், வரிவசூல் கணக்குகள் ஆகிய பதிவேடுகள்.

இந்த ஓலைச் சுவடிகளில் முதலாவதாகக் கூறப்பட்ட நூல்கள் இப்போது கிடைக்கின்றன. அவை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் போன்ற நூலகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் கூறப்பட்ட ஆவணங்களும் பதிவேடுகளும் இப்போது அவ்வளவாகக் கிடைப்பதில்லை. ஆனால் அவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர், அலுவலகம் போன்ற அலுவலகங்களில் கிராம நிலவிவரக் கணக்குகளும் வரிவசூல் கணக்குகளுமாக இருந்தன. பிற அலுவலகங்களில் கிரயம், தானம், கடன் ஒப்பந்தம் போன்ற சாசனங்களும் அரச ஆணைகள் போன்ற ஆவணங்களும் சில உள்ளன.

நூல்களெல்லாம் நெடுநாள்கள் வைத்திருக்க வேண்டியவை. அதனால் அவை பதப்படுத்திச் செம்மையாக்கப்பட்ட ஓலைகளில் எழுதப்பட்டன. அதுபோலவே கிரயம், தானம், கடன், ஒப்பந்தம் போன்ற சாசனங்களும், மன்னர்கள், அரசியல் அதிகாரிகள் போன்றவர்களால் வழங்கப்பட்ட ஆணைகள், பட்டயங்கள் போன்றவையும் நெடுநாள்கள் இருக்கும்படியாகப் பதப்படுத்தப்பட்ட ஓலைகளில் எழுதப்பட்டன.

ஆனால் அன்றாட நாட்குறிப்புகள், வரிவசூல் கணக்குகள், கடிதங்கள் ஆகியவை சிலநாள்களோ, ஓராண்டு அல்லது ஈராண்டு மட்டிலோ பயன்பட்டால் போதுமானவை. ஆகவே அவை பதப் படுத்தாத சாதாரண ஓலைகளில் எழுதப்பட்டன. ஆனாலும் அவை சுமார் 235 ஆண்டுகளாகப் பராமரிப்பு இன்றியே வைத்து வரப்பட்டுள்ளன.

இத்தகைய ஓலைச் சுவடிக் கணக்குகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை சிலவற்றைக் காண்போம். செங்கற்பட்டு மாவட்ட ஓலைச்சுவடி கிராமக் கணக்குகளை முதலில் காணலாம்.

கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆற்காட்டு நவாப் முகமதலி யிடமிருந்து செங்கற்பட்டு மாவட்டத்தை ஜாகிராகப் பெற்றனர். அப்போது தாமஸ் பார்நார்ட் என்ற ஆங்கிலேயப் பொறியாளரைக் கொண்டு செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும் நில அளவையும் நிலவரித் திட்டமும் செய்தனர். அதற்காக அப்போது பணி யாற்றிய கிராமக் கர்ணங்களால் 1762ஆம் ஆண்டு முதல் 1766-ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளில் எழுதப்பட்டவை பார்நார்ட் தரப்படிக் கணக்குகள் (Barnards Tarapadi Accounts) என்ற பெயரால் காஞ்சிபுரத்தில் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தன.

ஆங்கிலேயர் ஆட்சியில் குடிமைமுறை வழக்கங்கள், நிலத்தின் அனுபோக விவரங்கள், ஆலயங்களில் நடைமுறையிலிருந்த வழக்கங்கள், கிராம ஊழியங்கள் ஆகியவை சம்பந்தமான தகராறுகள் வரும்போது இந்த ஓலைச்சுவடிக் கணக்குகளில் குறிப் பிட்டுள்ள விவரங்களைக் கண்டறிந்து அந்தத் தகராறுகள் தீர்க்கப் பட்டன. அவ்வாறு தகராறுகள் வரும்போது இந்த ஓலைச்சுவடிக் கணக்குகளைப் பரிசீலித்த விவரங்களுக்கு ஆதாரங்கள் தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்ட ஆவணங் களில் உள்ளன.[1]

ஆலயங்கள் அறநிலையங்கள் கிராம ஊழியங்கள் சம்பந்த மாக நியமிக்கப்பட்ட இனாம் கமிஷனர்கள் இந்தக் கணக்குகளைக் கொண்டு பரிசீலனை செய்துதான் உரிமைப் பட்டயங்கள் (Title Deeds) வழங்கினார்கள். இக்கணக்குகளை முக்கியமான ஆவண மாகக் கருதி ஆங்கில அரசாங்கம் பாதுகாத்து வந்தது.

இந்தக் கணக்குகள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தற்போது தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.[2]

இந்தக் கணக்குகளில் முதன்மையானதும், மிகப் பழமையானதும், முக்கியத்துவம் வாய்ந்ததும் செங்கற்பட்டு மாவட்ட கிராமக் கணக்குகள்தான். இந்தக் கணக்கில் தமிழ்நாட்டு வரலாறு, பண்பாடு, கலை முதலான அனைத்துச் செய்திகளும் உள்ளன. தமிழ்நாட்டில் 14-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பௌத்தம் அழிந்து போனதாகக் கூறப்படுகிறது. ஆனால் செங்கற்பட்டு மாவட்ட ஓலைச்சுவடிக் கணக்குகளில் பெரிய காஞ்சிபுரம் கிராமக் கணக்கில் ''புத்தர் கோயில் குழி 10'' என ஒரு குறிப்பு காணப்படுகிறது.[3] ஆகவே 18-ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் ஒரு புத்தர் கோயில் இருந்தது என்று இதனால் தெரியவருகிறது.

தற்போது காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் வட்டத்திலுள்ள பெருநகர் கிராமக் கணக்கில் ''தேவேந்திரன் கோயில் குழி $1\frac{1}{2}$'' என்று ஒரு குறிப்பு காணப்படுகிறது.[4] அது பற்றிக் களஆய்வு மேற்கொண்டபோது அவ்வூரில் தேவேந்திரன் கோயில் இருப்பதும் அதற்கு அவ்வூர் மக்கள் தலைமுறையாக விழா எடுப்பித்து வருவதும் தெரிய வந்தது. அவ்விழா சங்க காலத்தில் காவிரிப் பூம்பட்டினத்தில் நடத்தப்பட்ட இந்திரவிழாவின் தொடர்ச்சியாக இருக்கலாம். ஆனால் சங்க காலத்திலிருந்து இன்றுவரை பெருநகர் கிராமமக்கள் தாங்கள் தேவவேந்திரன் கோயிலில் எடுத்து வரும் விழா இந்திரவிழா என்பதையே அறியாமல் காலங்காலமாக விழா எடுத்து வருகின்றனர். கார்த்திகை தீபவிழா தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றாலும் திருவண்ணாமலையில் சிறப்பாக நடைபெறுவது போல இந்திர விழாவும் தமிழகத்தில் அனைத்து ஊர்களிலும் நடைபெற்று வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் சிறப்பாக நடைபெற்றது என்பது தெரிய வருகிறது. சங்க காலத்தில் சிலப்பதிகார காவியத்திற்குக் காரணமாக நடைபெற்ற இந்திரவிழா காவிரிப்பூம் பட்டினத்தில் இப்போது நடைபெறாவிட்டாலும் பெருநகர் கிராமத்தில் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருவது இந்த ஓலைச் சுவடிக் கணக்கினால் தெரியவருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் செங்கற்பட்டு வட்டம் கோவளத்திற்கு அருகிலுள்ளது திருவிடந்தை கிராமம். அவ்வூரிலுள்ள நித்திய கல்யாணசுவாமி கோயிலுக்கு கி.பி. 1053 - இல் இராசாதிராச சோழனால் தானமாக வழங்கப்பட்ட செய்தி அக்கோயிலிலுள்ள ஒரு

கல்வெட்டால் தெரிய வருகிறது.[5] அதன் பிறகு அரசாண்ட மன்னர்களின் காலங்களில் ஏற்பட்ட கல்வெட்டுகளிலும் "திருவிடந்தை தேவதானம்" என்றே குறிப்பிட்டுள்ளது. திருவிடந்தை கிராம ஓலைச்சுவடிக் கணக்கிலும் திருவிடந்தை நித்திய கல்யாண சுவாமி சுரோத்திரியம் என்றே குறிக்கப்பட்டுள்ளது.[6] அதுபற்றித் தூய இனாம் பதிவேடுகள்.[7] (Inam Fair Register) முதலான பதிவேடுகள் மற்றும் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொண்டு நிறைவேற்றிய ஆணைகள் பரிசீலிக்கப்பட்டன. அப்போது கி. பி. 1953 - ஆம் ஆண்டில் திருவிடந்தை கிராமம் அவ்வூர் நித்திய கல்யாண சுவாமிக்கு தேவதான இறையிலியாக விடப்பட்டுப் பிறப்பித்த ஆணை 11-3-1958 தேதியில் தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டத்தின்படி ரத்து செய்யப்பட்டு ரயத்துவாரியாக மாற்றப்பட்டது தெரியவருகிறது.[7] ஆகவே தமிழகத்தில் ஒரு மன்னரால் கி.பி. 1053 - ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணை 905 ஆண்டுகள் நடைமுறையிலிருந்து வந்தது என்ற விவரத்தை இந்த ஓலைச்சுவடிக் கணக்கினால் தெரிந்து கொள்கிறோம்.

பண்டைய கல்வெட்டுகளில் கூறப்படும் வரியினங்களான தறியிறை, செக்கிறை, தரகு, தட்டார்ப்பாட்டம், மீன்பாட்டம், பாடிகாவல் முதலான வரியினங்கள் இந்த ஓலைச் சுவடிக் கணக்கிலும் காணப்படுகின்றன. எனவே பண்டைக் காலத்திலிருந்து 18 - ஆம் நூற்றாண்டு வரை பல வரியினங்கள் தொடர்ந்து வழக்கத்தில் வந்துள்ளனவென்று தெரிகிறது.

தவிர பாசன ஆதாரங்களுக்கு மராமத்து செய்த செய்திகளும், தூம்பு அமைத்த செய்திகளும் கல்வெட்டுகளில் காணப்படுவது போலவே இந்தக் கணக்கிலும் "ராசஸ்ரீ - பவுசா நாராயணப்பிள்ளை என்பவர் 300 வராகன் போட்டு கட்டு விச்சார்கள்- இந்த ஏரியின்கீழ் தரப்படிக்கு ரெண்டு பூவேளையும் யேரிக்கு பணம் போட்டுக் கட்டத் தேவையில்லை"[8] என்று ஒரு குறிப்பும் காணப்படுகிறது.

தஞ்சை இராசராசேச்சுரம் ஆலயத்திலுள்ள முதலாம் இராசராசசோழ மன்னனின் கல்வெட்டு ஒன்றில் பல ஊர்களை நில அளவை செய்து நிலவரித்திட்டம் ஏற்படுத்தித் தரவாரியான ஊரின் மொத்த நிலவாரத்தையும், மற்றும் அவ்வூர்களில் விதிக்கப்பட்ட அனைத்து வரிகளின் வருமானங்களையும் மேற்படி ஆலயத்திற்கு உரிமையாக வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில்

அந்த ஊர்களின் மொத்த நிலங்களின் பரப்பளவைக் கூறி, அப்பரப்பளவில் ஊரின் மொத்த குடியிருப்பு நத்தத்தின் பரப்பளவையும், குளங்கள், கோயில்கள், சுடுகாடு முதலான சமுதாய, புறம்போக்கு நிலங்களின் பரப்பளவையும் மானியங்களாக வழங்கப்பட்ட நிலங்களின் பரப்பளவையும் கழித்து மீதமுள்ள நிலங்களின் நிலவரி வருமானங்களும், இதர வருமானங்களும் தஞ்சை இராசராசேச்சுரம் ஆலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.[9]

அந்தக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது போலவே இந்த ஓலைச்சுவடி ஆவணங்களிலும் ஊரின் மொத்த நன்செய் நிலங்களின் பரப்பு, புன்செய் நிலங்களின் பரப்பு ஆக மொத்த பரப்பளவைக் கூறி, அதில் ஊர்நத்தம், கோயில்கள், குளங்கள், ஏரிகள், சுடுகாடுகள் முதலான புறம்போக்கு நிலங்களின் மொத்த பரப்பளவையும் மானிய நிலங்களின் மொத்த பரப்பளவையும் கழித்து நிகரமுள்ள நிலங்களுக்குப் பயிர்வாரியான உடன்வாரம் தானியத்தில் மேரை முதலான செலவினங்களைக் கழித்து மீதமுள்ள தானியத்தைக் குடிவாரம் மேல்வாரம் பிரித்தும் கூறப்பட்டுள்ளது. தொழில் வணிகம் முதலியவற்றிற்கு விதிக்கப்பட்ட இதர வரியினங்கள் ரொக்கதாயம் என்ற தலைப்பிலும் கூறப்பட்டுள்ளது ஒப்பு நோக்கத்தக்கது.[10]

---

1. தமிழ்நாடு அரசு ஆவணக்காப்பகம்-சென்னை-செங்கற்பட்டு மாவட்ட ஆவணங்கள் தொகுதி–440 பக். – 232 & 233.
2. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆ(பி)2/நி.மு 55426/84 நாள் : 20–12–1985.
3. செங்கற்பட்டு மாவட்ட ஓலைச்சுவடிக் கணக்குகள் கட்டு எண் 20. பெரிய காஞ்சிபுரம்.
4. செங்கற்பட்டு மாவட்ட ஓலைச்சுவடிக் கணக்குகள் கட்டு எண். 57 பெருநகர்.
5. கல்வெட்டு ஆண்டறிக்கை எண். 258/1910
6. திருவிடந்தை T D. எண் 1161/21-12-1865.
7. தமிழ்நாடு அரசு நிலவரித்திட்ட இயக்குநரின் Rc D.3 21750/57 நாள் : 11–3-1958.
8. செங்கற்பட்டு மாவட்ட ஓலைச்சுவடிக் கணக்குகள். கட்டு எண். 44 ஆ திருக்கச்சியூர் வகையேடு.
9. தெ இ. க. தொகுதி 2 பாகம் 1 எண்-4 .
10. செங்கற்பட்டு மாவட்ட ஓலைச் சுவடிக் கணக்குகள், கட்டு எண் 44 ஆ. திருக்கச்சியூர் வகையேடு.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்

# தமிழகக் கல்வெட்டுகள் படியெடுக்கும் முனைப்புத் திட்டம்

**சென்ற இதழ் தொடர்ச்சி..**

கல்வெட்டு முனைப்புத்திட்டம் தொடங்கப்பெற்ற செப்டம்பர் திங்கள் 2004 முதல் முடிவுற்ற மார்ச் மாதம் முடிய 4433 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், தருமபுரி, கோவை, கன்னியாகுமரி, சென்னை, மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய 10 மாவட்டங்களில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி நிறைவுற்றுள்ளது.

தற்போது திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், விருதுநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், ஈரோடு மாவட்டங்களில் இப்பணி தொடர்ந்து தொய்வின்றி நடைபெற்று வருகின்றது என்பது நிறைவளிக்கும் செய்தியாகும். மேலும் கல்வெட்டு களின் அருமையுணர்ந்து, வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்வெட்டுப் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்திற்கு உரிய ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் துறையின் சிறப்பு ஆணையர் திருமிகு தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப., அவர்கள் தலைமையில் சிறப்புநிலைக் கல்வெட் டாய்வாளர்கள் முனைவர் சு. இராஜகோபால், முனைவர் ஆ. பத்மாவதி, திருமதி அர. வசந்தகல்யாணி, திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. எஸ். இராமச் சந்திரன் ஆகியோர் மேற்பார்வையில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி யினைத் தொழிநுட்ப அலுவலர்கள் தத்தமது குழுவினருடன் சிறப்புற நடத்தி வருகின்றனர்.

களப்பணியில் கிடைத்த வரலாற்றுச்சிறப்பு மிக்க சில கல்வெட்டு, செப்பேட்டுச் செய்திகளைச் சுருக்கமாகக் காணலாம். மேலும் துறையில் இதுகாறும் படியெடுக்கப்பட்டுள்ள, வெளிவந்த மற்றும் வெளியிடப்பட வேண்டிய கல்வெட்டுகளின் விவரம் தரப்பட்டுள்ளது. மேலும் கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் எண்ணிக்கையும் பட்டியலிடப்பட்டுள்ளது.

## தொல்லியல் துறை இதுகாறும் படியெடுத்துள்ள கல்வெட்டுகள் விவரம் (மார்ச் 2005 முடிய)

| | | |
|---|---|---|
| *ஏப்ரல் 2003 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள்* | — | *5811* |
| *மார்ச் 2004 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள்* | — | *1835* |
| *ஏப்ரல் 2004 முதல் மார்ச் 2005 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள்* | — | *4620* |
| *(கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் செப்டம்பர் 2004 முதல் மார்ச் 2005 வரை படியெடுக்கப்பட்டவை)* | | *(4432)* |
| *படியெடுக்கப்பட்டுள்ள மொத்த கல்வெட்டுகள்* | — | *12266* |
| *இதுவரை அச்சானவை (21 தொகுதிகள்)* | — | *2590* |
| *வெளியிட வேண்டியவை* | — | *9676* |
| *படிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள்* | *சென்னை* | *3347* |
| | *கோவை* | *700* |
| | *மதுரை* | *1700* |
| | *மொத்தம்* | *5747* |
| *படிக்க வேண்டியவை* | — | *3929* |

''நவில்தொறும் நூல் நயம் போலப்
பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு''

தொல்லியல்துறை அண்மையில் வரலாற்று ஆய்வாளர்களும் ஆர்வலரும் படித்துப் பயனுறும் வண்ணம் வரலாற்றின் பல்வேறு உட்பிரிவுகளில் நூல்களை வெளியிட்டுள்ளது. அனைவரும் படித்துத் தமது ஆய்வுகளுக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என விரும்புகிறோம்.

1. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் 2004
2. தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள்
3. தமிழ்நாட்டுச் செப்பேடுகள்
4. தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள்
5. கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேடு
6. ஜம்பை ஓர் ஆய்வு
7. Rock Art of Tamilnadu
8. Alagankulam - An Ancient Roman Port City of Tamilnadu

## கல்வெட்டு முனைப்புத் திட்டம் - படியெடுத்த கல்வெட்டுகள் விவரம்
## செப்டம்பர் 2004 முதல் மார்ச் 2005 வரை

| எண் | மாவட்டம் | 2004 செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | 2005 ஜனவரி | பிப்ரவரி | மார்ச் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் (பிரிக்கப் படாதது) (நாகப் பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர்) | 93 | 69 | 169+5 | 181+70 நிறைவடைந்தது | 60+8 | 47+18 நிறைவடைந்தது | — |
| 2 | நாகர்கோவில் | 78 | 101 | 14 | நிறைவடைந்தது | — | — | — |
| 3 | மதுரை (பிரிக்கப் படாதது) மதுரை, தேனி, திண்டுக்கல் | 242 | 140 | 98 | 82 நிறைவடைந்தது | — | — | — |
| 4 | தருமபுரி | 6 | நிறைவடைந்தது | — | — | — | — | — |
| 5 | கடலூர் | 35 | 32 | 59+80 | 58 | — | 5+51 | 28 |
| 6 | பெரம்பலூர் (வட்டம்) பிரிக்கப்படாத திருச்சி மாவட்டம் | 9 | — | 32 | 24+12 | 86 | 58 | 26 |
| 7 | சென்னை | — | 11 | நிறைவடைந்தது | — | — | — | — |
| 8 | காஞ்சிபுரம் | 44 | 67 | 5 | — | — | 154 | — |
| 9 | திருவள்ளூர் | 19 | 44 | 100 | 176 | 73 | 83 | 51 |
| 10 | இராமநாதபுரம் | — | — | 15 | 15+4 | 70 | 20 | 55 |


| எண் | மாவட்டம் | 2004 செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | 2005 ஜனவரி | பிப்ரவரி | மார்ச் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | வேலூர் | — | 4 | 48 | — | — | — | — |
| 12 | கோவை | — | 35 | 32 | 69 | — | — | நிறைவடைந்தது |
| 13 | சேலம் | — | — | 24 | — | — | — | — |
| 14 | திருவண்ணாமலை | — | — | 52 | — | — | — | — |
| 15 | திருநெல்வேலி | — | — | — | 59+6 | 101 | 61 | 67+18 |
| 16 | கரூர் | — | — | — | 30 | 20 | 10 | 10±6 |
| 17 | திருச்சிராப்பள்ளி (பிரிக்கப்படாதது) திருச்சி, உடையார் பாளையம், லால்குடி வட்டங்கள் | — | — | — | — | 116+48 | 121+63 | 139+30 |
| 18 | ஈரோடு | — | — | — | — | 33+8 | 44 | 25 |
| 19 | விருதுநகர் | — | — | — | — | 155 | 108 | 93 |
| | மொத்தம் | 526 | 503 | 648+65 | 721+92 | 722+56 | 819+132 | 494+84 |
| | | | | | | | கூடுதல் | 4433+449 |

## அளவுகோல்கள்

1. மயிலாடுதுறை வட்டம் குறிச்சி பஞ்சாயத்து சாத்தங்குடி விசுவநாதசுவாமி திருக்கோயிலில் உள்ள கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு நில அளவைக் குறியீடு திருக்கோயிலின் மகாமண்டபத் தெற்குப் பக்கப் பட்டியிலுள்ளது. இதில் மூன்று இடங்களில் மேலும் கீழுமாக, + + எனக் கூட்டல் அடையாளக் குறியீடுகள் வெட்டப் பட்டுள்ளன. நடுவில் மெல்லிய கோடு ஒன்று காணப்படுகிறது. கல்வெட்டில் அளவைக் குறிக்கும் எழுத்துகள் ஏதும் இல்லை.

அளவுக் குறியீடு கூடுதல் நீளம் : 10 1/2 அடி, (488 செமீ.)
நடுவில் உள்ள குறியீடு
அதிகம் நீண்ட (பெரிய) அளவு : 5 1/2 அடி, (330 செமீ.)
கடைசியில் உள்ள குறியீடு
குறைந்த (சிறிய) அளவு : 5 அடி (158 செமீ.)

இது சோழர் காலத்தில் நிலத்தை அளக்கப் பயன்படுத்திய அளவினைக் குறிப்பதாக உணர முடிகிறது. இதில் 10 1/2 அடி என்பது நிலத்தை அளப்பதற்கும், 5 அடி என்பது துணி, வேட்டி, புடவை, போன்றவற்றை அளப்பதற்கும் அளவுகோல் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.



2. தரங்கப்பாடி வட்டம் கிடங்கல் - நத்தம் ஊராட்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் முன்மண்டபத் தெற்குப் பட்டியில் உள்ள அளவை.

இந்த அளவுகோலைக் குறிக்க மூன்று இடங்களில் குறியீடுகள் (கூட்டல்) வெட்டப்பட்டுள்ளன. ஒவ்வோர் இடத்திலும் ஒரு முறை மட்டுமே + குறியீடு கல்லில் வெட்டப்பட்டுள்ளது.

அளவைக்குறியீடு கூடுதல் நீளம் : 8 1/2 அடி (264 செமீ.)
நடுவில் உள்ள குறியீடு
உடன் பெரிய அளவு : 5 1/2 அடி (176 செமீ.)
கடைசியில் உள்ள குறியீடு
உடன் (சிறிய அளவு)குறைந்த அளவு : 3 அடி (88 செமீ.)

இக்கல்வெட்டின் நடுவில் ''திருமிகைச்சூர் முவை'' என்று பெயர் வெட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கல்வெட்டில் முவை என்பது முழம் என்ற அளவையின் சுருக்கமாக இருக்கலாம். திருமிகைச்சூர் - திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் அமைந்துள்ளது. அக் காலத்தில் திருமிகைச்சூரிலிருந்து இங்கு வந்த நில அளவை அதிகாரி தன் ஊர்ப்பெயரில் இந்த அளவுகோலை இங்கு வெட்டி இருக்கலாம்

என்றும் உணர முடிகிறது. கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இது பிற்காலச் சோழர் அல்லது விஜயநகரர் காலத்தது என அறிய முடிகிறது.

இதில் 8 1/2 அடி என்பது நில அளவைக் குறிக்கும் பெரிய அளவு கோல் என்றும் 5 1/2 அடியில் நிலத்தை அளப்பதற்கு (சிறிய அளவு) குறைந்த அளவு ஒன்று இருந்ததும், பெரிய அளவில் இருந்து சிறிய அளவைக் கழிக்க வேண்டும் என்பதற்கு அளவுகோலில் (— என) கழித்தல் குறியீடு வெட்டப்பட்டுள்ளதும் ஊகிக்கலாம். புடவை, வேட்டி, துணி, பூவின் முழம் இவை அளக்க 3 அடி சிறிய அளவு பயன்பட்டது என்பதும் இந்த அளவுகோல் குறியீட்டால் அறியலாம்.

\+ — + +

திருமிகைகூர் முவை

கண்டறிந்து ஆய்வு செய்தவர்கள் திரு. கோ. முத்துசாமி, காப்பாட்சியர், தரங்கம்பாடி மற்றும் திரு. கோ. அர்ச்சுனன், காப்பாட்சியர், தஞ்சாவூர் ஆகியோர்.

## கொங்குச் சேரர் வரலாற்றில் புதிய ஒளி

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் கப்பலூர்ப்பட்டி என்னும் சிற்றூரில் புதிய கல்வெட்டு ஒன்று கண்டறியப்பட்டது. இவ்வூரில் மிக அண்மையில் கட்டப்பட்ட தண்டபாணி கோயிலின் முன்புறம் உள்ள திடலில் நிறுத்தப்பட்டுள்ள இக்கல்வெட்டுத் தூண் சுமார் ஆறடி உயரமும் ஒரு அடி அகலமும் கொண்டது. கல்லில் ஒருபக்கம் மட்டுமே கல்வெட்டு வெட்டப்பட்டு உள்ளது. தமிழ்மொழியில் தமிழ் எழுத்தாலான இக்கல்வெட்டு இப்பகுதியில் ஆட்சி செய்த சேர மரபினரின் வரலாற்றில் ஒரு புதிய ஒளியைத் தருவதாக அமைந்துள்ளது.

### கல்வெட்டுப் பாடம்

1. ஸ்ரீ கோக்கண்
2. டன் மாந்தர
3. னுக்குச் செ
4. ல்லா நின்ற
5. யாண்டாறு
6. இவ்வாண்டு
7. பெருமாள் கி
8. ழ வாழந்து ம
9. ழ நாட்டான்மூர்
10. க் கூற்றத்துக் கீ
11. ழ் கூற்றில் புன்
12. கம்பாடி வேள்
13. ளான் கூத்தன்
14. காடனிரத்தியா
15. ன் நெருப்பறை
16. யாசாரிகள் மகள்
17. இரத்தி இரதி
18. யாறை நசையாணி
19. யுந் தாயரையு
20. ஞ்சாத்திச் செ
21. ய்வித்த கிண
22. றும் வட்டு
23. ம்

இக்கல்வெட்டு கோக்கண்டன் மாந்தரன் என்னும் அரசனின் ஆறாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. மழ நாட்டு ஆன்மூர்க் கூற்றம் என்னும் ஒரு நாட்டு பிரிவைக் குறிப்பிடுகிறது. இதன் கீழ் கூற்றில் அமைந்த புங்கம்பாடி என்னும் ஊரின் ஆசாரி மகளும், தாயும் எவ்வகையிலோ இறந்து போயினர். அவ்விருவரையும் நினைவு கூறும் வகையில் தண்ணீர் தருமம் செய்கின்ற நோக்கத்தில் கிணறு ஒன்று தோண்டப்பட்டு அதில் நீர் இறைப்பதற்கு வசதியாக வட்டு (சக்கரம்) ஒன்றையும் அமைத்துள்ளனர் என்ற செய்தியை இக்கல்வெட்டு தருகிறது. இவ்விடத்தில் இருந்த கிணறு கடந்த வருடத்தில் தான் இவ்வூர் மக்களால் மூடப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு குறிப்பிடும் மன்னன் மாந்தரன் ஆய்வாளரின் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கத்தக்கவன்.

இதுவரை இப்பெயர் கொண்ட கல்வெட்டு எங்கும் கிடைத்திலது. பழனி வரை பரவியிருந்த கொங்கு நாட்டைச் சேரர்கள் ஆண்டனர். பல கல்வெட்டுகள் கிடைத்திருப்பினும் மாந்தரன் என்னும் மன்னன் பெயர் கொண்ட முதல் கல்வெட்டு இதுவே.

இக்கல்வெட்டைக் கண்டறிந்து படியெடுத்தவர்கள் திரு. சொ. சாந்தலிங்கம், தொல்லியல் அலுவலர், மதுரை; திரு. சொ. சந்திரவாணன், காப்பாட்சியர், இராமநாதபுரம் ஆகியோர்.

## கோயில் மணி கொடை

கடம்பனேசுவரர் கோயிலுக்கு எறும்பூர் சௌந்தரராஜன் கிராமவாசிகள் பிலவ ஆண்டு, சித்திரை மாதம் 10-ஆம் தேதியில் கோயில் மணி ஒன்றை கொடையாக அளித்த செய்தி தெரிய வருகிறது. இது பிற்காலத்துக் கொடையாகும்.

### கோயில் மணியில் பொறிக்கப்பட்ட வாசகம்

1. அருள்மிகு கல்யாணசுந்தரி கடபவனேர் திருக்கோயில்
2. சௌந்தரராஜன் கிராமவாசிகள் மணி உபயம் பிலவருஷம் சித்திரைமாதம் 10-ம் தேதி.

எழுத்துப் பொறிகளைப் படித்துத் தகவல் தந்தவர்:-

கா. நெடுஞ்செழியன்
காப்பாட்சியர்

## பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் ஆய்வு


10-3-2005 அன்று 2003-2004 - ஆம் ஆண்டிற்கான பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் இறுதி ஆய்வு திரு. இராஜாராம் ஸ்ரீராம் இஆப, அவர்களால் நடத்தப்பெற்றது. அப்போது அவர் துறையின் நிர்வாகப்பணிகளின் சீர்திருத்தங்கள் குறித்து ஆய்வு செய்தார். மேலும் இவ்வாண்டில் துறை ஆற்றியுள்ள செயற்பாடுகள் குறித்துச் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இஆப, அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்கள். கல்வெட்டு, செப்பேடு, ஓலை ஆவணங்கள் போன்ற அடிப்படைச் சான்று நூல்களும், தொல்லியல் சிறப்புக்குரிய தொல் பழங்கால ஓவியம், ஐம்பை கோயில் ஆய்வு, கோவை மாவட்டத் தொல்லியல் கையேடு போன்ற நூல்களும், அழகன்குளம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நடைபெற்ற அகழாய்வு அறிக்கை நூல்கள் இரண்டும் இவ்வாண்டில் வெளியிடப்பட்டதும், கல்வெட்டுப் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 4000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டதும் போன்ற இத்துறையின் பணிகளை அறிந்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைச் சிறப்பு அலுவலர் பெரிதும் பாராட்டினார்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறைச் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப, அவர்கள் சார்பாகச் சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர் திருமதி அர. வசந்தகல்யாணி அவர்களால் வெளியிடப்பெற்றது.




3-01-05 அன்று மும்பை
பல்கலைக்கழக சமூகவியல் துறைப்
பேராசிரியை முனைவர் கமலாகணேஷ்
அவர்கள் கோட்டைப்பிள்ளைமார்
சமூக வரலாற்றுக் கட்டமைப்பு
என்ற தலைப்பில் உரையாற்றினார்.

## Inscriptions Copied –Deciphered-Published
## By TamilNadu State Department of Archaeology




8-03-05 அன்று தமிழ்நாட்டுக்
கல்வெட்டுகள் 2004 நூலினைச்
சிறப்பு ஆணையர்
தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இஆப, அவர்கள்
வெளியிடத் தமிழ் வளர்ச்சித்துறை
இயக்குநர் முனைவர்
ம. இராசேந்திரன் அவர்கள்
பெற்றுக்கொண்டார்



Book Release function of "Rock Art of Tamil Nadu" on 12-04-2005 authored by Thiru T.S. Sridhar IAS, Special Commissioner of Archaeology, released by Dr. K.K. Chakravarty IAS, Director General, National Museums New Delhi and First Copy received by Thiru P.A. Ramiah IAS, Secretary, TDC & RE DEPT. Flanked by Thiru M.A. Siddique IAS, Director, Govt . Museum, & Thiru R. Kasinathan IAS, Commissioner, ART & CULTURE.

